## பொருளடக்கம்

பொருளடக்கம் ........................................................................................................ 53

முகவுரை ........................................................................................................ 54

நிறைவேற்று அறிக்கை........................................................................................ 55

அறிமுகம் ........................................................................................................ 56

முதியோர்களுக்கான தேசிய செயலகம்.......................................................................... 57

தொலைநோக்கு................................................................................................ 57

பணிக்கூற்று.................................................................................................... 57

நிறுவன கட்டமைப்பு........................................................................................... 58

முதியோர்களுக்கான தேசிய சபை-2017........................................................................ 59

முதியோர்களுக்கான தேசிய சபை தவிசாளரின் அறிக்கை-2017................................ 60

முதியோர்களுக்கான தேசிய சபை பணிப்பாளரின் அறிக்கை-2017.............................. 61

2017 ஆம் ஆண்டு செயற்திறன் அறிக்கை................................................................... 64

முதியோர் இல்லங்களை புனரமைத்தல் தொடர்பில் உதவி வழங்குதல்............... 64

முதியோர் அடையாள அட்டை வழங்கப்பட்ட விபரம் 2017.................................. 65

2017 முதியோர் சங்கங்களை அமைத்தல் மற்றும் நிதி உதவி வழங்குதல் ரூபா 5000/= 66

பிரதேச மட்ட முதியோர் அமைப்புக்களுக்கு ரூபா. 7,500/=................................. 67

மாவட்ட மட்ட முதியோர் அமைப்புக்களுக்கு ரூபா. 15,000/=.............................. 67

முதியோர்களை பராமரித்தற் சேவை – பயிற்சியளிக்கும் நெசயற்திட்டம்................. 68

முதியோர் தாபரிப்பு நிகழ்ச்சித் திட்டம்........................................................... 69

கதிர்காம யாத்திரை விடஜதியின் வரஜமானம் மற்றும் செலவுத் தகவல்கள் 2017 72

சிரேஸ்ட பிரஜைகளுக்கான ஓய்வூதியத் திட்டம்.................................................. 73

முதியோர் பராமரிப்பு சபை........................................................................ 74

முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் கணக்குக் கொள்கை............................. 76

2017 மார்கழி 31 ஆம் திகதிய நிதி நிலவரக் கூற்று................................................. 77

வருமானம் மற்றும் செலவின அறிக்கை........................................................................ 78

நிதிப்பாய்ச்சல் கூற்று............................................................................................ 79

மேலதிகப் பட்டியல்............................................................................................... 80

கணக்காளர் தலைமை அதிபதியின் கருத்து.................................................................. 83

கணக்காளர் தலைமை அதிபதியின் அறிக்கை............................................................. 84

கணக்காளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்பான விபரங்கள்....................... 101

## முகவுரை

2000 ஆம் ஆண்டடின் 09 ஆம் இலக்க முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய சமூக சேவைகள் அமைச்சின் கீழ் நிறுவப்பட்டுள்ள முதியோர்களுக்காகன தேசிய செயலகம், இலங்கை முதியோர் சமூதாயத்தின் மேம்பாட்டுகளுக்காக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள், கொள்கைசார் தீரமானங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டின் இலங்கையிலுள்ள முதியோர் சமுதாயத்தின் நலன்புரியினை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு அமுறப்படுத்தப்பட்ட நிகழச்சித் திட்டங்களின் செயற்பாட்டு அறிக்கையினை இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு முன்வைப்பது 2017 ஆம் வருட அறிக்கையின் நோக்கமாகும்.

சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டடின்போது முதியோரின் சுய கௌரவம், சுதந்திரம், பங்களிப்பு, பாதுகப்புக்காகப் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், மிகவும் வினைத்திறனான சேவையொன்றை நிறைவேற்றுவதற்கு முடிந்துள்ளமை எமக்குக் கிடைத்த அதிஸ்டமாக உள்ளது.

மேலும் தற்போதைய அரசின் கீழ் கடந்த சந்ததியினரின் பங்குதாரர்களான முதியோர்களுக்கிடையே 70 வயதிற்கு மேற்பட்ட மூத்த பிரஜைகளுக்கு ரூபா. இரண்டாயிரம் கொடுப்பனவினை வழங்கும் பொருட்டு அர்ப்பணிப்புடன் செயற்பட்டமை மகிழ்ச்சிக்குறிய விடயமாகும்.

# நிறைவேற்று அறிக்கை

2017 ஆம் ஆண்டில் முதியோர்களுக்கான தேசிய செயலகம், இந்நாட்டின் முதியோர் சமூகத்தின் சேமநலத்திற்காக இலங்கை பூராவும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. இதனால் 2017 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டவாறு வெற்றிகரமாக பௌதிக மற்றும் நிதிசார் முன்னேற்றமொன்றை சுவீகரித்துக் கொள்ள முடிந்துள்ளது.

தற்போதைய அரசின் தேசிய அரசாங்கக் கொள்கையின் கீழ், 70 வயதினைப் பூர்த்தி செய்துள்ள மூத்த பிரஜைகளுக்கு ரூபா. இரண்டாயிரம் வாழ்வாதார உதவியினை வழங்குதல் பிரதானமானது என்பதுடன், நடைமுறையிலுள்ள சவால்களை வெற்றிகொள்ளுவதற்கு சமூக சேவைகள் நலனோம்புகை மற்றும் கால்நடை வளர்ப்பு அமைச்சின் கீழும் மற்றும் சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சின் கீழும் கௌரவ அமைச்சர்கள் மற்றும் கௌரவ பிரதியமைச்சர்களின் வழிகாட்டல் மற்றும் அமைச்சின் உத்தியோகத்தர் குழாம் இது தொடர்பில் காட்டிய ஆர்வத்தினை மிகவும் பாராட்டுதல் வேண்டும்.

அதே போல சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சின் கீழ் செயலாளரினை உள்ளடக்கிய அலுவலகக் குழாமுக்கும், சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சின் செயலாளரினை உள்ளடக்கிய அலுலவகக் குழாமுக்கும், முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் அலுவலகக் குழாமுக்கும், பிரதேச செயலகப் பிரிவுகளில் விடயம் தொடர்பில் கடமையினைப் பதிலீடு செய்யும் உத்தியோகத்தர்களுக்கும் விசேட நன்றிகள் உரித்தாகும்.

# அறிமுகம்

கடந்த பல தசாப்பதங்களாக நாட்டில் காணப்படும் தொடர்ந்து இடம் பெறும் சமூக, பொருளாதார அபிவிருத்திகளின் விளைவாக சுகாதார, ஊட்டச்சத்து, கல்வி ஆகிய துறைகளில் தென்படும் மேம்பாடுகளைக் காணக்கூடியதாகவிருக்கின்றது. மேற்குறிப்பிட்ட காரணிகளின் விளைவாக பிறப்பு இறப்பு விகிதத்தில் வீழ்ச்சி, எதிர்பார்க்கும் ஆயுட்காலம், முதியோர் சனத்தொகையின் அதிகரிப்பு ஆகியன காணப்படுகின்றன. இலங்கையில் முதியோர் சனத்தொகையில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதன் பிரகாரம், அடுத்த தசாப்தத்தில் நாட்டின் முதியோர் சனத்தொகையின் தற்போதைய விகிதமாகிய 14.6% லிருந்து 21% மாக வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

முதியோரின் வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்துவதற்கான சேமநல வசதிகளை தரமுயர்த்தல் அவசியமாகும். முதியோரின் உரிமைகளும் கூட பாதுகாக்கப்படல் வேண்டும். இதனை அடைவதற்காக முதியோருக்கான தேசிய செயலகம் உயர் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றது. முதியோர் சமூகத்தை சக்தியூட்ட 2017 ஆம் வருடத்தில் பல்வேறு நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. கிராமிய முதியோர் குழுக்கள், மாகாண முதியோர் சபைகள், மாவட்ட முதியோர் சபைகள் ஆகியவற்றைப் பதிவு செய்தல், நாட் காப்பக நிலையங்களுக்கு நிதியுதவியளித்தல், மனோநிலை மற்றும் ஆன்மீக விருத்திகளை மேம்படுத்த உளவியல் ஆற்றுப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல், முதியோர் காப்பாளர்களைப் பயிற்றுவித்தல் என்பன எம்மால் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதான நடவடிக்கைகளில் சிலவாகும்.

அதனூடாக முதியோர் தனிமையான வாழ்க்கையை நடத்துவதைத் தடுப்பதும், சமூகத்தில் அவர்களின் பங்குபற்றலை மேம்படுத்தலும் எமது முக்கிய நோக்கமாகும்.

## முதியோர்களுக்கான தேசிய செயலகம்

2000 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க முதியோர் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் முதியோர்களுக்கான தேசிய செயலகமும், முதியோர்களுக்கான தேசிய சபையும் நிறுவப்பட்டுள்ளன.


## *தொலை நோக்கு*

"இலங்கை மக்களை வினைத்திறன் மிக்கதும் சக்தி வாய்ந்ததுமான வயோதிபமடைதலை நோக்கிக் கொண்டு செல்லுதல்"


## *பணிக்கூற்று*

''முதியோர்களின் சுதந்திரம், பாதுகாப்பு, ஆத்ம திருப்தி, பங்களிப்பு, கௌரவத்தினை உறுதிப்படுத்துதல், சமூக அபிவிருத்திச் செயற்பாடுகளில் முதியோர்களின் பங்களிப்பின் முக்கியத்துவத்தினை புரிய வைத்தல் மற்றும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களினூடாக முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது எமது பணியாகும்''

# நிறுவனக் கட்டமைப்பு-2017



# முதியோர்களுக்கான தேசிய சபை – 2017




| பெயர் | பதவி |
|---|---|
| 1. திருமதி. சிரானி வீரக்கோண் | தலைவர் |
| 2. திரு. சமன் உடவத்த | உப தலைவர் |
| 3. திரு. சுவிந்த எஸ். சிங்கப்புலி | செயலாளர் |
| 4. திரு. வஜிர கம்புறுகம | சபை உறுப்பினர் |
| 5. திரு. திலக் சொய்சா | சபை உறுப்பினர் |
| 6. திரு. மகிந்த ரனசிங்க | சபை உறுப்பினர் |
| 7. கலாநிதி திருமதி. லீலா பியசீலி குணசேகர | சபை உறுப்பினர் |
| 8. எலிக்கேவல சீலானந்த தேரர் | சபை உறுப்பினர் |
| 9. சிரேஷ்ட பேராசிரியர் எல்.திசாநாயக்க | சபை உறுப்பினர் |
| 10. திரு.பாலித்த எல்கடுவ | சபை உறுப்பினர் |
| 11. திரு.சுனில் குணவர்த்தன | சபை உறுப்பினர் |
| 12. திருமதி. டி.எம்.சி.சி.கே.குணரத்ன | சபை உறுப்பினர் |
| 13. திருமதி.மலர் கங்காதரன் | சபை உறுப்பினர் |
| 14. வைத்திய கலாநிதி.சி சிரோமி மாதுவகே | சபை உறுப்பினர் |
| 15. வைத்திய கலாநிதி. சிரானி ரணசிங்க | சபை உறுப்பினர் |

## முதியோர்களுக்கான தேசிய சபையின் தவிசாளர் அவர்களின் அறிக்கை 2017

எண்பதாம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்ட முதியோர் சனத்தொகை வளர்ச்சி, தற்போது சமூகப் பிரச்சினையொன்றாக வந்துள்ளது. நாளுக்கு நாள் துரிதகதியில் முதியோர் சனத்தொகை உயர்வடைந்து காணப்படுதல் எதிர்காலத்திற்குப் பிரச்சினையொன்றாக இல்லாதவாறு, முதியோர் சமுதாயத்தின் நலன்புரி மற்றும் பாதுகாப்புக்கென திட்டங்களைத் திட்டமிடும் பிரதான பொறுப்பு எமது அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இப்பணியினை நிறைவேற்றுவதற்கு “2011 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் திருத்தஞ் செய்யப்பட்ட, 2000 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க முதியோர் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டத்தின் மூலம்” கிடைக்கப் பெற்ற அதிகாரங்களின் பிரகாரம் முதியோர்களுக்கான தேசிய சபை, அது தொடர்பில் கொள்கைசார் தீர்மானத்தினை எடுத்தல் இடம்பெறுகின்றது. அதன் பிரகாரம், அச்செயற்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு ஸ்தாபிக்கப்பட்டுள்ள முதியோயர்களுக்கான தேசிய செயலகத்தினூடாக பல்வேறான நிகழ்ச்சித் திட்டங்கள் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டு அமுலாக்கப்படுவதுடன், 2017 ஆம் ஆண்டில் முதியோர் நலன்புரிச் சேவைகளை மிகவும் பரந்த முறையில் சாதகமான பெறுபேறுகளை எதிர்பார்த்து விரிவுபடுத்துவதற்கு ஆரம்பித்துள்ளோம்.

இப்பொறுப்பினை நிறைவேற்றுவதில் பிரதான பொறுப்பினை வகிக்கும் முதியோர்களுக்கான தேசிய சபை, முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் பணிப்பாளரினை உள்ளடக்கிய பதவியணியினர், அர்ப்பணிப்புடன் செய்யும் பணி பாராட்டப்படுதல் வேண்டும் என்பதுடன், பிற பிரத்தியேக மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள், தமது நேரம், ஊழியப் படை மற்றும் முதியோர் சமுதாயத்தின் மேம்பாட்டிற்கென அர்ப்பணிப்புடன் செய்யப்படும் பணியினை பாராட்டுவதுடன், எனது நன்றியினை அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எனினும், இன்றளவில் இலங்கையில் 3 மில்லியனுக்கும் அதிகமான முதியோர் சனத்தொகையின் நலன்புரி மற்றும் பாதுகாப்பினை இவ்வாறான நிறுவனத்திற்கு வரையறை செய்து நிறைவேற்றுதல் பாரிய சவாலானதாகும் என்பதுடன், கஸ்டமான செயற்பாடு என்பதால், பொல பொபொளுஙநச்சபொருளாதார உறுதிப்பாட்டுடனான குடும்ப அடிப்படை மையமான ஒட்டுமொத்த சமூகத்தினால் துரித கதியில் அதிகரிக்கும் முதியோர் சனத்தொகையின் நலன்புரி மற்றும் பாதுகாப்புக்கு அர்ப்பணித்துள்ள முதியோர்களுக்கு பாதுகாப்பான நாளைய தினமொன்றினை முன்னிட்டு செயற்படுவதற்கு காலம் கனிந்துள்ளது என்பதை நான் நன்கு உணர்கின்றேன்.

**எச்.எம். காமினி செனெவிரத்ன,**
செயலாளர்,
ஆரம்பக் கைத்தொழில் மற்றும்
சமூக வலுவூட்டல் அமைச்சு,
தவிசாளர்,
முதியோர்களுக்கான தேசிய சபை.

# முதியோர்களுக்கான தேசிய செயலகப் பணிப்பாளரின் அறிக்கை 2017

முதியோர்களுக்கான தேசிய சபையின் கொள்கை ரீதியான தீர்மானங்கள் மற்றும் நிச்சயிக்கப்பட்ட வழிமுறையின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு, முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் மூலம் 2017 ஆம் ஆண்டில் அடைந்துள்ள செயலாற்றல் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**1. ரூபா 2000 மூத்த பிரஜைகளுக்கான கொடுப்பனவு**

70 வயதினைப் பூர்த்தி செய்த மூத்த பிரஜைகளின் பாதுகாப்பு மற்றும் நலன்புரியினை வழங்குவதை நோக்காகக் கொண்டு 2016 பாதீட்டுப் பிரேரணையின் கீழ் முதியோர் நலன்புரி தொடர்பில் மேலதிக ஏற்பாடு அரசினால் ஒதுக்கப்பட்டடுள்ளது.

70 வயதினைத் தாண்டிய குறைந்த வருமானத்தினைக் கொண்ட 386083 மூத்த பிரஜைகளுக்கு 2017 ஆம் ஆண்டில் ரூபா. 2000.00 கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. இதற்காக ரூபா. 9266 மில்லியன் ஒதுக்கப்பட்டடுள்ளதோடு, 9010.03 மில்லியன் ரூபா செலவாகியுள்ளது.

**2. கிராமிய முதியோர் சங்கங்களை நிறுவுதல் மற்றும் நிதியுதவி வழங்கல்**

229 கிராமிய முதியோர் சங்கங்கள், 02 பிரதேச முதியோர் சங்கங்கள், 01 மாவட்ட முதியோர் அமைப்புக்கள் மற்றும் 01 மாகாண முதியோர் அமைப்புக்கும் மேலும் அனுபவப் பகிர்வு நிகழ்ச்சித்திட்டம் 01 உம் ஆத்மீக நிகழ்ச்சித்திட்டம் 01 இவையாவற்றுக்குமாக மொத்தமாக 1.4983 மில்லியன் ரூபா செலவாகியுள்ளது.

**3. முதியோர்களுக்கு அடையாள அட்டை வழங்கல்**

வருடத்தினுள் ரூபா 0.4679 மில்லியன் செலவில் முதியோர்கள் 45,156 பேர்களுக்கு முதியோர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

**4. பயிற்சியளித்தல் மற்றும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள்.**

முதியோர்களுக்கான உடற்பயிற்சி நிகழச்சிகள் 02 நடாத்தப்பட்டுள்ளதோடு, உளவளத்துணை இசை நிகழச்சிகள் 10 நடாத்தப்பட்டுள்ளதோடு, மகளிர் தினக் கொண்டாட்ட விழா 01 உம், நிலையான அபிவிருத்தியும் சனத்தொகையும் தொடர்பான பாராளு மன்ற உறுப்பினர்களின் மாநாட்டில் கலந்து கொள்ளுதல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொண்டமை. பாடசாலை மாணவர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் 07 உம், ஸ்டிகர் ஒட்டி விழிப்புணர்வு செய்தல் நிகழ்ச்சி 01 உம், முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர்களுக்கான முன்னேற்ற அறிக்கைக் கூட்டம் 03, மாவட்ட முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உதவியார்களுக்கான முன்னேற்ற அறிக்கைக் கூட்டம் 02 உம், மாவட்ட முதியோர் அமைப்புக்களிலுள்ள அங்கத்தவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி 01 உம், முதியோர் பராமரிப்பு நேர்காணல் மற்றும் பயிற்சியினை நடாத்துதல் (NVQ-02 ) பயிற்சியளிக்கப்பட்ட

நபர்கள் 17 பேர்களுக்கும், முதியோர்களை பராமரிப்பாளர்களுக்கான ரி.சேர்ட் மற்றும் தொப்பி 250 உம், இவையாவற்றுக்கும் ரூபா 3.9491 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.

05. **இலவசமாகக் கண்வில்லை மற்றும் செவிப்புல உபகரணங்கள் வழங்குதல்**

2017 ஆம் ஆண்டுக்குள் வைத்திய முகாம் 09 நடர்த்தப்பட்டுள்ளது. இதற்காக ரூபா. 0.7034 மில்லியன் செலவு செய்யப்பட்டஜள்ளது.

**06. சர்வதேச முதியோர் தினக் கொண்டாட்டம்.**

முதியோர்களின் திறமைகள், பங்களிப்பு, மற்றும் பங்குபற்றுதலினூடான எதிர்காலத்தினை நோக்கி கால்பதிப்போம் எனும் தொனிப்பொருளில் 2017 ஆம் ஆண்டு முதியோர் தினக்கொண்டாட்ட விழா, 2017.10.01 ஆம் திகதி கௌரவ அமைச்சரின் தலைமையிலும் மற்றும் நாட்டின் பல திசைகளிலிருந்தும் வந்த முதியோர்களின் பங்களிப்புடனும் நடாத்தப்பட்டதுடன் இந் நிகழ்வில் 100 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், 75 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களில் அதிக பிள்ளைகளைக் கொண்டவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டு, அதே நேரம் சமூர்த்திப் பயனாளிகளின் சிறுவர்களுக்கு மத்தியில் வினா-விடைப் போட்டி நடாத்தப்பட்டமை மற்றும் பாடசாலை மட்டங்களில் நடைபெற்ற சித்திர ஆக்கப்போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கியதற்காக ரூபா 16.3435 மில்லியன் செலவு செய்யப்பட்டது.

07. **முதியோர் இல்லங்களுக்கு நிதியுதவி வழங்குதல்**

முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் கீழ் நிர்வாக குழுவினால் முகாமைத்துவம் செய்யப்படுகின்ற கதிர்காம முதியோர் இல்லம் மற்றும் சுற்றுலா விடுதி மற்றும் மாலிகாதன்ன எச்ஜின் நோனா ஞாபகார்த்த முதியோர் இல்லத்தினை உள்ளடக்கி 10 முதியோா் இல்லங்களை மேம்படுத்துவதற்கு ரூபா 2.3731 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டுள்ளது.

08. **முதியோர்களை காக்கும் அர்ப்பணிப்பாளர் நிகழ்ச்சித் திட்டம்**

தனவந்தர்களின் நன்கொடையினூடாக 2017 ஆம் ஆண்டு ஒருவருக்கு மாதம் ஒன்றுக்காக ரூபா 500/= வீதம் 13 முதியோர்களுக்கும், 250/= வீதம் 22 முதியோர்களுக்கு தொடர்ச்சியாக நிதியுதவி வழங்க முடிந்துள்ளது.

09. **முதியோர்களுக்கான பராமரிப்புச் சபை**

2017 ஆம் வருடத்தினுள் சபைக் கூட்டங்கள் 50 நடாத்தப்பட்டுள்ளதுடன் முதியோர்களிடம் இருந்து கிடைத்த முறைப்பாடுகள் 168 ஆகும். அதன் பிரகாரம் பராமரிப்புச் சபையின் மூலமாக 63 முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதுடன், இந் நடவடிக்கைகளுக்காக ரூபா 1.0031 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.

**10. முதியோர்களுக்கான தேசிய சபை**

2017 ஆம் ஆண்டில் முதியோர்களுக்கான தேசிய சபைக் கூட்டங்கள் 09 நடாத்தப்பட்டுள்ளதுடன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கலந்துரையாடல்கள் 03 நடர்த்தப்பட்டடுள்ளதோடு இதற்காக ரூபா. 1.0489 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.

11. **வெளியீடுகள்**

2017 ஆண்டுக்குள் மாவட்டச் செயலகங்களுக்கு பதாதைகள் (பெனர்) 25 வழங்கப்பட்டன. முதியோர் சஞ்சிகை 1500 பிரதிகள் அச்சிடப்பட்டது, முதியோர் காலாண்டு சஞ்சிகைகள் 3000 பிரதிகள் அச்சிடப்பட்டது.( ஒவ்வொரு காலாண்டுக்கும் 1000 பிரதிகள் உள்ளடங்களாக 03 காலாண்டுகள் வெளியிடப்பட்டன ) செயற்திறனுள்ள முதியோர் வாழ்க்கைக்கான வழி (கையேடு ) 2500 அச்சிடப்பட்டது, முதியோர்களுக்கான சுய தொழில் விபரங்கள் அறிக் கைகள் கயைெட பிரதிகள் 6000 அச்சிடப்பட்டது, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுக்கான அறிக்கைக் கையேடு மற்றும் இறு வெட்டுக்கள் அச்சிடப்பட்டதற்காக ரூபா. 1.6862 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டிற்காக மூலதனச் செலவின் கீழ் ரூபா. 20 மில்லியனும் மற்றும் மீண்டுவரும் செலவின் கீழ் ரூபா 130 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் கட்டு நிதியாக முறையே ரூபா 12.7 மில்லியன் மற்றும் ரூபா. 112.402 மில்லியனே கிடைக்கப் பெற்றிருந்தது. ஆகையினால் 2017 ஆம் ஆண்டு தொடர்பில் மீண்டுவரும் செலவின் கீழ் ரூபா. 110.195 மில்லியன் நிதியும் மற்றும் மூலதனச் செலவின் கீழ் ரூபா. 6.149 மில்லியன் நிதியும் முதியோர் நலன்புரிச் செயற்பாடுகளுக்கு நேரடியாகச் செலவு செய்யப்பட்டுள்ளது.

எஸ்.டி.உடவத்த<br>
பணிப்பாளர்,<br>
முதியோர்களுக்கான தேசிய<br>
செயலகம்

## 2017 ஆம் ஆண்டின் அபிவிருத்திச் செயற்திறன்

## முதியோர் இல்லங்களைப் புனரமைத்தலுக்கு நிதி உதவி விழங்கல்

| மாகாணம் | முதியோர் இல்லம் | கொடுப்பனவு செய்யப்பட்ட நிதி (ரூபா) |
|---|---|---|
| கண்டி | கொடிகாம்ப முதியோர் இல்லம் | 25,000.00 |
| | மஹிய்யாவ முதியோர் இல்லம் | 84,652.00 |
| குருநாகல் | மஹவ மீமுத்தா முதியோர் இல்லம் | 197,875.00 |
| | தன்கொடுவ வித்யாபந்து முதியோர் இல்லம் | 161,875.00 |
| களுத்துறை | மதுகம வேத்தேவ ஆண்கள் முதியோர் இல்லம் | 114,000.00 |
| மொனராகல | பிளிசரன முதியோர் இல்லம் | 172,572.33 |
| கேகாலை | சிங்கசெவன முதியோர் இல்லம் | 237,000.00 |
| | **செலவு** | **992,974.00** |
| | கதிர்காமம் முதியோர் இல்லம் | 1,045,552.92 |
| | மல்வது ஹிரிபிட்டிய எல்ஜின் நோநா முதியோர் இல்லம் | 257,895.61 |
| | மொத்தச் செலவு | 2,296,422.86 |

# அடையாள அட்டைகளை வழங்குதல் - 2017

| மாகாணம் | மாவட்டம் | எண்ணிக்கை |
|---|---|---|
| மேல் மாகாணம் | களுத்துறை | 2276 |
| | கொழும்பு | 2338 |
| | கம்பகா | 4264 |
| மத்திய மாகாணம் | மாத்தளை | 730 |
| | நுவரெலியா | 2042 |
| | கண்டி | 4112 |
| தென் மாகாணம் | ஹம்பாந்தோட்டை | 1906 |
| | காலி | 3346 |
| | மாத்தறை | 2266 |
| கிழக்கு மாகாணம் | மட்டக்களப்பு | 765 |
| | அம்பாறை | 1421 |
| | திருகோணமலை | 687 |
| வடமேல் மாகாணம் | குருநாகல் | 3109 |
| | புத்தளம் | 1935 |
| வட மத்திய மாகாணம் | அனுராதபுரம் | 1616 |
| | பொலனறுவை | 834 |
| ஊவா மாகாணம் | பதுளை | 1539 |
| | மொணராகலை | 1110 |
| சப்பிரகமுவ மாகாணம் | இரத்தினபுரி | 2113 |
| | கேகாலை | 4043 |
| வட மாகாணம் | யாழ்ப்பாணம் | 739 |
| | மன்னார் | 572 |
| | முல்லைத்தீவு | 356 |
| | கிளிநொச்சி | 226 |
| | வவுனியா | 723 |
| மொத்தம் | | 44803 |
| பிரதான காரியாலயத்தினூடாக நடமாடும் சேவையில் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளின் எண்ணிக்க | | 353 |
| வழங்கப்பட்ட மொத்த அடையாள அட்டைகளின் எண்ணிக்க | | 45156 |

# கிராமிய முதியோர் சங்கங்களை அமைத்தல் மற்றும் நிதி உதவி வழங்கல் ரூபா. 5,000- 2017

| மாகாணம் | மாவட்டம் | ரூ 5000 உதவி பெற்ற சங்கங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| மேல் | களுத்துறை | 4 |
| | கொழும்பு | 12 |
| | கம்பஹா | 14 |
| மத்திய | கண்டி | 18 |
| | மாத்தளை | 04 |
| | நுவரெலியா | 22 |
| தெற்கு | காலி | 25 |
| | மாத்தறை | 04 |
| | அம்பாந்தோட்டை | 05 |
| வடக்கு | யாழ்ப்பாணம் | 53 |
| | வவுனியா | 01 |
| | முல்லைத்தீவு | 07 |
| கிழக்கு | மட்டக்களப்பு | 12 |
| | அம்பாறை | 15 |
| | திருகோணமலை | 05 |
| வடமேல் | புத்தளம் | 04 |
| சப்ரகமுவ | இரத்னபுரி | 06 |
| | கேகாலை | 04 |
| ஊவா | பதுளை | 02 |
| வுடமத்திய | அநுராதபுரம் | 12 |
| மொத்தம் | | 229 |

**பிரதேச மட்ட முதியோர் சங்கங்களுக்கு ரூ.7,500/- நிதியுதவி வழங்கல் 2017**

| மாகாணம் | மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு |
|---|---|---|
| கிழக்கு மாகாணம் | அம்பாறை | 01 |
| | மட்டக்களப்பு | 01 |
| மொத்தம் | | 02 |

ரூபா. 15,000 நிதியுதவி வழங்கப்பட்ட மாவட்ட முதியோர் அமைப்புக்கள் - 2017

| மாகாணம் | மாவட்டம் | அமைப்புக்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| வட மாகாணம் | யாழ்ப்பாணம் | 01 |
| மொத்தம் | | 01 |

# முதியோர் பராமரிப்புப் பயிற்சி - பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்

முதியோர்களுக்கு தேவைப்படுகின்ற பாதுகாப்பு மற்றும் தாதி நலச்சேவை வழங்கும் நோாக்கில் முதியோர்களைப் பாதுகாக்கும் தொண்டர் ஊழியர்களுக்கு பயிற்சியளித்து, சேவையில் ஈடுபடுத்தும் நிகழ்ச்சித்திட்ம் ஒன்று முதியோர்களுக்கான தேசிய செயலகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு முதியோர்களை பாதுகாத்து கவனித்துக்கொள்ளும் மற்றும் அவர்களின் சுகாதார ரீதியான சேவைகள் வழங்கல் தொடர்பான மூன்று வாரங்களைக் கொண்ட முறையான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இது வரையில் குறிப்பாக மேல் மாகாணத்தினுள் வாழுகின்ற தேவையுடைய முதியோர்களுக்கு அவர்களின் சேவையை பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு பகல் நேரத்தில் 08 மணித்தியாலங்களைக் கொண்ட காலப்பகுதிக்காக தலா ரூபா 750.00 வீதமும், இரவில் பணியாற்றுபவருக்கு ரூபா. 900.00 வீதமும் மற்றும் 24 மணி நேரம் பூராவும் பணியாற்றுபவருக்கு ரூபா. 1650.00 வீதமும் கட்டணமாக அறவிடப்படுகிறது.

முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் முழுமையான மேற்பார்வையின் கீழ் சேவை வழங்கப்படுவதுடன் சேவை பெற்றுக்கொள்பவரின் தேவைக்கமைய ஆண், பெண் என பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறே சேவையில் ஈடுபடும் சகல நலச் சேவைகளும் மரியாதையாகவும் ஒழுக்கமாகவும் வழங்கப்படும்.

சமூக சேவைகள் அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு ஒன்றிணைந்து பயிற்சிகளை திட்டமிட்டு செயற்படுத்துவதுடன் பயிற்சிகளை திறம்பட பூர்த்திசெய்கின்றவர்களுக்கு முறையான சான்றிதழும் அடையாள அட்டையும் வழங்கப்படுகிறது. ஆகையினால் மிகவும் நம்பிக்கையுடன் அந்த பாதுகாப்பு நலச் சேவைகளை அந்த தொண்டர் ஊழியர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

இந்த செயற்றிட்டம் முதியோர்களுக்கும் அவர்களின் குடும்பத்தாருக்கும் மட்டுமல்ல ஏனையவர்களுக்கும் அரச அங்கீகாரமுடைய பயிற்சிகளின் பின்னர் பெறுமதியான சான்றிதழ் பெறமுடியும். அவ்வாறு பெற்று தொண்டர் ஊழியராக சேவை புரிந்து வருமானமும் பெற்றுக்கொள்ள முடியும்.

தற்சமயம் மேல் மாகாணத்தை மையப்படுத்திக் கொண்டுள்ள இந்த முதியோர் கவனிப்பு தொண்டர் சேவை எதிர்காலத்தில் ஏனைய மாகாணங்களுக்கும் விரிவுபடுத்தி பரந்தளவில் சேவை வழங்க எதிர்பார்க்கின்றோம்.

## முதியோர் தாபரிப்புத் திட்டம்

முதியோர்களுக்கான தேசிய சபையின் பிரேரணையின் பிரகாரம் உதவியற்ற மிகவும் வறிய நிலையிலுள்ள 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்கு உதவும் நோக்கில் இந்த முதியோர்களை காக்கும் அர்ப்பணிப்பாளர் நிகழ்ச்சித்திட்டம் முதியோர்களுக்கான தேசிய செயலகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு எந்தவொரு நபருக்கும் பணம் நன்கொடையாக வழங்க முடியும் என்பதுடன் அவ்வாறு நன்கொடையாளர் மூலம் வழங்கப்படுகின்ற பணம் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் மிகவும் வறிய உதவியற்ற முதியோர்களுக்காக மாதம் ஒன்றுக்கு ரூபா 250 வீதம் வழங்கப்படுகிறது. பயனாளிகளுக்குப் பணம் வழங்கப்படும் போது 04 மாதங்களுக்கு ஒரு முறை ஒரு பயனாளிக்குரூபா 1000 வீதம் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வழங்கப்படுகிறது. பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பயனாளியிடம் பணம் ஒப்படைக்கப்படும்.

பிரதேச செயலாளர் அலுவலகத்திலுள்ள எமது உத்தியோகத்தர் (முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர்/சமூக சேவை உத்தியோகத்தர்) ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் ஒரு முறை பயனாளிகள் பற்றிய தகவல்கள் ஆராயப்படுவதுடன் பயனாளிகளுக்குப் பணம் வழங்கும் போது பணம் வழங்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நன்கொடையாளர்களுக்கு அறிவிக்கப்படும்.

அவ்வாறு இந்த நிகழ்சித்திட்டத்தின் கீழ் உதவி வழங்கும் போது விருப்பமான ஒருவரை அல்லது சிலரை அல்லது தாம் விரும்பும் பிரதேசத்திலுள்ள ஒருவரை அல்லது சிலரை நன்கொடையாளர்களினால் தேர்ந்தெடுக்க முடியும். அவ்வாறு இல்லையென்றால் அந்த தேர்வு இந்த அலுவலகத்தின் மூலம் செய்யப்படுவதுடன் பயனாளியின் பெயர், விலாசம், உள்ளடக்கிய தகவல்கள் நன்கொடையாளருக்கு வழங்குவதற்கு எமது அலுவலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

இந்த நிகழ்சித்திட்டத்திற்காக பங்களிப்பு வழங்க விரும்பும் நபர் பத்தரமுல்லை, இலங்கை வங்கிக் கிளையில் இல. 5234881 ஐ கொண்ட முதியோர்களை காக்கும் அர்ப்பணிப்பாளர் நிகழ்ச்சித்திட்டக் கணக்கிற்கு உங்கள் நன்கொடைகளை வைப்பிலிட முடியும் என்பதுடன் அவ்வாறு வைப்பிலிடும் பொழுது பணம் வைப்பிலிட்ட பற்றுச்சீட்டின் பிரதியொன்றை எமக்கு வழங்க வேண்டும். அவ்வாறு இல்லையென்றால் எமது அலுவலகத்திற்கு நேரில் வந்து உங்களின் பணத்தை வழங்க முடியும்.

இந்த நிகழ்ச்சித் திட்டம் உதவியற்ற முதியோர்களுக்காக செய்யப்படும் மிகப்பெரும் தர்மமாகும். ஆகையினால் அதை மென்மேலும் விரிவுபடுத்தி முதியோர்கள் பலருக்கு இந்த நிகழ்ச்சியின் மூலம் சேவைகளை வழங்க எதிர்பார்க்கின்றோம்.

அதன் பிரகாரம் 2017 ஆம் ஆண்டின்போது முதியோர்களை காக்கும் அர்ப்பணிப்பாளர் நிகழ்ச்சியின் நன்கொடையாளர்கள்,பயனாளிகள் மற்றும் குறித்த பிரதேச செயலகப் பிரிவுகள் கீழே தரப்பட்டுள்ளது.

| இல | பங்களிப்பாளர்களின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை | பயனாளிகளின் பெயர் | பிரதேச செயலகம் |
|---|---|---|---|---|
| 1. | திருமதி. டப்லிவ்.எம்.வத்சலா | 01 | ஜீ.அஸ்பத்தினியே | பாத்தும்பர |
| 02 | திருமதி.ப்ரேமா குணதாச | 02 | திருமதி. எம்.கே.ஏசோமா குணவர்த்தன | மினுவாங்கொட |
| | | | திரு. எம்.ஜி.விபுலசேன | மினுவாங்கொட |
| 03 | கணக்கு | 23 | திருமதி. எம்.ஜி.வயலட் | தமுத்தேகம |
| | | | திருமதி.டி.எம்.டிங்கிரி அம்மா | மாஸ்பொத |
| | | | திருமதி.ஆர்.ஏ.கெரலயின் நோநா | மிகிந்தலை |
| | | | திருமதி.டிபி.ஜென்னோனா | ரிதிகம |
| | | | திருமதி.டி.டப்ளிவ்.ஜி. அங்கோ | மாவனல்லை |
| | | | திருமதி.டப்ளிவ்.ஜி.குணவதி | குண்டகசாலை |
| | | | திருமதி.ஆர். எசிலின்நோனா | கடுவல |
| | | | திருமதி.ஈ.பியசீலி | கடுவல |
| | | | எம். ஏ.கேமலதா பரேரா | மகரகம |
| | | | திருமதி.ஜி.ஏ. பியசேன | |
| | | | திருமதி.எம்.டி.லீலாவதி | மகக்குமுக்கடவல |
| | | | திருமதி.எம்.எம்.டி.மெனிக்காம் | கிரிபேவ |
| | | | எச்.எம்.ஹேரத்மெனிக்க | இப்பாகமுவ |
| | | | ஏ.பி. தர்மவர்த்தன | தெரனியகல |
| | | | ஐ. ஜி. சொய்சா | வரகாபொல |
| | | | ஜெ.பி.லெயிசா | வரகாபொல |
| | | | ஆர்.சீ.வினி | கிரிபாவ |
| | | | கே.ஆர்.டிங்கிரி | பொல்கஹவெல |
| | | | ஏ.கேமபாலபெரேரா | மகரகம |
| | | | திரு. எஸ் டப்லிவ். பீரிஸ் ஸ்டீவன் பிரநான்து | சாவகச்சேரி |
| | | | வர்னபுலகே நன்த்தாச | சீதாவாக்க |
| | | | திரு. எச். குசும் பெரேரா | சீதாவாக்க |
| | | | திருமதி. பனவன்னகே பரிதீலதா | சீதாவாக்க |
| 04 | திருமதி.நந்த கருணாசேன | 01 | திருமதி.ஜீ.எம்.லில்லி | களனி |
| 05 | திருமதி. தரங்க கருனாசேன | 02 | கே.மேரிநோனா | கெஸ்பேவ |
| | | | ஐ.என்சிநோனா | கெஸ்பேவ |
| 06 | திருமதி.ஜயன்த பிங்ஜிஹேவா | 01 | எம்.நோபட் விலசேன | கெஸ்பேவ |
| 07 | நதீரா கருணாசேன | 02 | டப்லிவ்.டி.தர்மதாச | மஹரகம |
| | | | டப்லிவ்.ஏ.டப்ளிவ் ரெஜிநோல்ட் | மஹரகம |

| | | | | |
|---|---|---|---|---|
| 08 | திருமதி.ல்லனி | 02 | திருமதி.ஜீ.ஆர்.சாதிநோநா | வரகாபொல |
| | | | திருமதி.கே.எம். பண்டாரமெனிக்கே | பாதஹேவகெட |
| 09 | சாந்தி முதியோர் அமைப்பு ஹிங்குரான்கொ | 01 | திரு. ஈ.ஜி. டிங்கிரி பண்டா | தெல்கொட |

# கதிர்காம யாத்திரை விடுதியின் வருமானம் மற்றும் செலவு விபரங்கள் - 2017

<table>
<tr><th rowspan="2">மாதம்</th><th rowspan="2">அறைகள் ஒதுக்கப்பட்ட தொகை</th><th rowspan="2">வருமானம் ரூபா.</th><th colspan="2">செலவுகள்</th><th rowspan="2">பிற</th></tr>
<tr><th>நீர்ப் பட்டியல் ரூபா.</th><th>மின்சாரப் பட்டியல் ரூபா.</th></tr>
<tr><td>ஜனவரி</td><td colspan="2" rowspan="7">புனர் நிர்மான செயற்பாடுகள் மேற் கொள்ளப்படுவதால், தங்குமிட வசதிகள் நடைபெற்வில்லை</td><td>7,251.07</td><td>439.90</td><td>-</td></tr>
<tr><td>பெப்ரவரி</td><td>6,947.63</td><td>459.60</td><td>-</td></tr>
<tr><td>மார்ச்</td><td>5,855.60</td><td>258.20</td><td>-</td></tr>
<tr><td>ஏப்ரல்</td><td>8,072.65</td><td>423.00</td><td>-</td></tr>
<tr><td>மே</td><td>5,831.60</td><td>313.20</td><td>-</td></tr>
<tr><td>யூன்</td><td>6,177.17</td><td>240.00</td><td>-</td></tr>
<tr><td>யூலை</td><td>4,669.35</td><td>368.10</td><td>-</td></tr>
<tr><td>ஆகஸ்டு</td><td>16</td><td>30,750.00</td><td>5,166.17</td><td>5,600.60</td><td></td></tr>
<tr><td>செப்ரெம்பர்</td><td>10</td><td>22,500.00</td><td>17,364.47</td><td>3,588.90</td><td></td></tr>
<tr><td>ஒக்டோபர்</td><td>06</td><td>10,750.00</td><td>11,246.00</td><td>1,392.90</td><td></td></tr>
<tr><td>நவம்பர்</td><td>08</td><td>15,875.00</td><td>11,563.63</td><td>1,682.70</td><td></td></tr>
<tr><td>திசம்பர்</td><td>39</td><td>75,000.00</td><td>10,704.97</td><td>4,211.10</td><td></td></tr>
<tr><td>மொத்தம்</td><td>79</td><td>154,875.00</td><td>100,850.31</td><td>18,982.20</td><td></td></tr>
</table>

# சிரேஸ்ட பிரஜைகளுக்கான ஓய்வூதியத் திட்டம்

சமூக சேவைகள் மற்றும் சமூக நலனோம்புகை அமைச்சின் மேற்பார்வையின் கீழ் 2007 ஆம் ஆண்டு சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு முதியோர்களுக்கான தேசிய செயலகம் மற்றும் இலங்கை சமூக பாதுகாப்புச் சபை ஒன்றிணைந்து இந்த ஓய்வூதியச் சம்பளத் திட்டத்தை அமுற்படுத்த தீர்மானித்ததுடன் அது 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் அமுற்படுத்தப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 70 வயதுக்குக் கூடிய தமது பிள்ளைகளாலும் உறவுகளாலும் கவனிக்கப்படாதுள்ள, அரச ஓய்வூதியச் சம்பளம், விதவைச் சம்பளம், ஊழியர் சேமலாபம நிதியம், விவசாய மீன்பிடி அல்லது சுயதொழில் ஓய்வூதியங்கள் அல்லது வேறு வகையிலான சமூக காப்புறுதித் திட்ட பங்களிப்பு பணம் கிடைக்கப்படாத மிகவும் உதவியற்ற நபர்களை இதில் சேர்த்துக்கொள்ளப்படும். அத்துடன் நீண்டகாலமாக நோய்வாய்ப்பட்டுள்ள, அங்கவீனமுற்றோர்கள் இதில் முன்னுரிமை பெறுகின்றனர்.

இந்த ஓய்வூதியச் சம்பளத்திட்டத்திற்கு தேவையான நிதியாக ரூபா 03 மில்லியன் நிதி சுப்பிரி வாசனா லொத்தர் நிதியத்தால் வழங்கப்பட்டுள்ளதுடன் இலங்கைச் சமூக பாதுகாப்பு சபையினால் அந்தப் பணம் முதலீடு செய்யப்பட்டு மாதாந்தம் ஓய்வூதியச் சம்பளங்களாக செலுத்தப்படுகிறது.

தகைமையுடைய சிரேஸ்ட பிரஜைகளுக்காக மாதாந்தம் ரூபா 500/= வீதம் 55 பயனாளிகளுக்கு இந்த நன்மைகள் வழங்கப்பட்டுள்ளன.

## முதியோர்களுக்கான பராமரிப்பு சபை

2000 ஆம் ஆண்டு இலக்கம் 09 ஐ கொண்ட முதியோர்களின் உரிமைகளை பாதுகாக்கும் சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள முதியோர்களுக்கான பராமரிப்புச் சபையானது நீதிமன்றச் சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற தலைவர் உட்பட உறுப்பினர்கள் ஐந்து பேர்களைக் கொண்டதாகும். இதன் தற்போதைய தலைவர் ஓய்வூபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதியாவர்.

இதன் பணியாவது, பிள்ளைகள் மூலம் கவனிக்கப்படாத, 60 வயதுக்கு மேற்பட்ட வயோதிப பெற்றோர்களுக்கு அந்த கவனிக்காத பிள்ளைகளிடம் இருந்து வாழ்வதற்கு ஏதும் பராமரிப்பு பணம் பெற்றுக்கொடுப்பதாகும். அதன் பிரகாரம் இந்த பிள்ளைகள் மூலம் முதியோர்களின் உரிமைகளை பாதுகாக்கும் சட்டத்தின் பிரகாரம் இரண்டு தரப்பினர்களையும் அழைத்து விசாரிக்கப்படுகிறது. பெற்றோர்களின் வருமானம் மற்றும் தங்கியிருப்பதற்கான தேவை ஆகியவை கவனத்தில் கொள்ளப்படுகிறது.

இங்கு பெற்றோர்களுக்கு பராமரிப்பு பணம் கோரப்படும் பொழுது தமது பிள்ளைகளிடத்திலும் தமது வளர்ப்பு பிள்ளைகளாக வளர்த்த பிள்ளைகளிடத்திலும் (Adopted Child) பராமரிப்பு பணம் கோர முடியும். மேலும் ஏதேனும் பெற்றோரின் வயது 60 க்கு குறைவாக இருக்கும் நிலையில் அவர்களின் அன்றாட பராமரிப்புக்களை செய்துகொள்ள முடியாத உடல் அங்கவீனமுற்றவர்களுக்கும் இந்தச் சட்டத்தின் 24 (I) ஆம் பிரிவின் கீழ் பராமரிப்பு பணம் கோர முடியும்.

முதியோர்களுக்கான பராமரிப்புச் சபையிடம் கோரிக்கை விடுப்பதற்குத் தேவையான விண்ணப்பம் பிரதேசத்தின் கிராம சேவை உத்தியோகத்தரிடமும் பிரதேச செயலாளர் அலுவலகத்திடம் இருந்து பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் முதியோர்களுக்கான தேசிய செயலகத்தினால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் இந்த சபைக்கு குடும்ப பிணக்குகள், காணிப் பிணக்குகள் அல்லது சொத்து சம்பந்தமாக குடும்பங்களுக்கிடையிலுள்ள பிணக்குகள் போன்றவைகளை தீர்த்து வைக்கும் அதிகாரம் இந்தச் சட்டத்தின் கீழ் இல்லை.

இந்த பராமரிப்புச் சபையினால் வழங்கப்படுகின்ற ஏதேனும் பராமரிப்புப் பணம் செலுத்துதல் சம்பந்தமான உத்தரவு ஒன்றை ஏதும் பிள்ளையினால் செய்யாதிருக்கும்போது சட்டத்தின் 32 ஆவது பிரிவின் பிரகாரம் சபைக்கு அந்த தீர்மானத்தை அமுற்படுத்துவதற்காக நீதவான் நீதிமன்றத்திற்கு சாட்ட முடியும். அதன்போது நீதவானுக்கு அந்த உத்தரவை பராமரிப்பு கட்டளைச் சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட கட்டளையொன்றை செயற்படுத்தும் விதத்தில் அமுற்படுத்தும் அதிகாரம் உண்டு.

# முதியோர்களுக்கான பராமரிப்பு சபை - 2017

2016 வருடத்தின் கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகள் - 168

காணிப் பிணக்கு போன்ற தொடர்பற்ற முறைப்பாடுகள் - 10

அதன்படி இறுதிவரை விசாரிக்கப்பட்ட முறைப்பாடுகள் 99

சபையினால் தீர்த்துவைக்கப்பட்ட முறைப்பாடுகள் - 63

பல காரணங்களினால் நிராகரிக்கப்பட்டது இடமளிக்க முடியாத முறைப்பாடுகள் - 24

வாபஸ் பெற்றுள்ள முறைப்பாடுகள் - 12

தற்சமயம் விசாரிக்கப்பட்ட வண்ணமுள்ள முறைப்பாடுகள் - 54

## முதியோர்களுக்கான பராமரிப்புச் சபை உறுப்பினர்கள்

தலைவர் - திரு.டபிள்யு.கருணாரத்ன

செயலாளர் - திரு. எம்.ஜீ. புஞ்சிபண்டா

**சபையின் உறுப்பினர்கள்**

1. திரு. டீ.எல்.ஆர். சுபசிங்க
2. திரு. கலாநிதி லீல் குணசேகர
3. திரு. கே. மார்க்கண்டு
4. திரு. ஏ.ஆர்.ஏ.எம். லாபீர்

# முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் கணக்குக் கொள்கை

## பொதுவான கணக்குக் கொள்கை

அ) இந்த நிறுவனமானது நிதிக் கூற்றினை தயாரிப்பது தொடர்பில் கணக்கீட்டுக் கொள்கை மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமனம் போன்றவற்றினைப் பின்பற்றுகின்றது.

ஆ) அட்டுறுவினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

இ) அரச கொடைகள்

முதியோர்களுக்கான தேசிய செயலகம் வருமானம் கிடைக்கப் பெறுகின்ற நிறுவனமல்ல. இது திறைசேரியில் இருந்தே நிதியினைப் பெற்று இயங்கி வருகின்றது.

திறைசேரியின் மூலம் கிடைக்கப் பெறும் பணத்தில் மீண்டு வரும் செலவினங்களாக எடுத்துக் கொள்ளப்படும் பணம் வருமானம் மற்றும் செலவினக் கணக்கிலும், மூலதனச் செலவானது அரச மூலதனக் கொடையில் பிரதிபலிக்கப்படுகின்றது.

### நிலையான சொத்துக்கள் மீதான பெறுமானத் தேய்வு

**அ)** பெறுமானத் தேய்வுக் கொள்கை

I. நிலையான சொத்துக்கள் மீதான பெறுமானத்தேய்வுக் கொள்கையானது கொள்வனவு செய்யப்படும் ஆண்டில் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டு அகற்றப்படும் ஆண்டில் பெறுமானத் தேய்வு செய்யப்படுவதில்லை.

II. கீழ்வரும் நிலையான சொத்துக்களுக்கு நேர் கோட்டு முறையில் பெறுமானத் தேய்வு கணிப்பிடப்படும்.

| | | |
|---|---|---|
| கட்டடங்கள் | - | 04% |
| வாகனம் | - | 10% |
| தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்கள் | - | 15% |
| இயந்திரங்கள் மற்றும் பொருத்துக்கள் | - | 20% |

ஆ) மூலதனச் செலவினம் மற்றும் மீண்டெழும் செலவினம் நிதி பெற்றுக் கொள்வது தொடர்பான அறிக்கைகள் உள்ளக்கப்பட்டுள்ளன.

இ) நிலையான சொத்துக்களின் கீழ்க் காட்டப்பட்டுள்ள (தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்) சொத்துக்களில் சில பிரதேச செயலக மட்டத்தில் பேணப்பட்டு வருகின்றன.

பின்னிணைப்பு –1பி

# முதியோர்களுக்கான தேசிய செயலகம்

## 2016 31 ஆம் மார்கழி திகதிய நிதி நிலபரக் கூற்று

| விபரம் | குறிப்பு | 2017 (ரூபா) | 2016 (ரூபா) |
|---|---|---|---|
| **நிலையான சொத்துக்கள்** | | | |
| **பணம் மற்றும்** | | | |
| கையிலிருப்பில் உள்ள பணம் | 1 | 100,943,749 | 42,799,797 |
| நிலையானவைப்பிலுள்ள பணம் | 2 | 849,424,967 | 395,974,959 |
| ஊழியர் கடன் | 3 | 4,122,360 | 4,059,118 |
| மீள் நிரப்பப்படாத பண்டிகை முற்பணம் | 4 | 372,636 | 7,500 |
| வேறு வருமானங்கள் | 5 | 24,956,482 | 754,041 |
| சரக்குப் பொருட்கள் | 6 | 845,638 | 533,709 |
| கிடைக்கப்பெறவேண்டிய வருமானம் | | **980,665,831** | **444,129,125** |
| | | | |
| | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| வாகனங்கள் | | 9,331,500 | 11,486,000 |
| எந்திரங்களும் மற்றும் பொருத்துதல்களும் | | 8,339,330 | 12,273,593 |
| தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | | 9,145,484 | 11,232,078 |
| கட்டிடங்கள் | | 40,840,718 | 7,338,953 |
| காணி | | 34,200,000 | 13,000,000 |
| | | **101,857,031** | **55,330,624** |
| | | **1,082,522,863** | **499,459,749** |
| மொத்த சொத்துக்கள் | | | |
| **பொறுப்புக்கள்** | | | |
| நடைமுறைப் பொருப்புக்கள் | | | |
| சேர்ந்த செலவுகள் | 7 | 2,304,116 | 311,034 |
| இதர வைப்புக்கள் | 8 | 1,807,092 | 1,866,920 |
| கணக்காய்வுக் கட்டணங்களை ஒதுக்குதல் | 9 | 709,490 | 80,000 |
| பணிக்கொடையினை ஒதுக்குதல் | 10 | 14,587,988 | 12,446,287 |
| கடந்த வருட கூடுதல் கட்டணம் | | 836,871 | - |
| அரச வழங்கல்கள் (மூலதனம்) | | | 293,600 |
| ஊழியர் கடன் நிதி | 11 | 910,588 | 737,992 |
| முதியோர் பாதுகாப்பு நிதியம் | 12 | 951,629,668 | 427,704,100 |
| முதியோர் தாபரிப்பு நிதி | 13 | 139,188 | 214,188 |
| மொத்த நடைமுறைப் பொருப்புக்கள் | | **972,925,000** | **443,654,121** |
| நிகரச் சொத்துக்கள் | | **109,597,862** | **55,805,628** |
| | | | |
| நிகரச் சொத்துக்கள/பங்கு | | | |
| அரச திரண்ட மூலதனம் | 14 | 55,635,986 | 54,816,763 |
| திரண்ட நிதியம் | 15 | 66,564,480 | 13,000,000 |
| திரண்ட மேலதிகம்/பற்றாக்குறை | 16 | (12,602,603) | (12,011,135) |
| **மொத்தத் தேறிய சொத்துக்கள்** | | **109,597,862** | **55,805,628** |

.....................................

மகிந்த செனெவிரத்ன,
தவிசாளர்
முதியோர்களுக்கான தேசிய சபை.

.............................................

சுவிந்த எஸ். சிங்கப்புலி,
பணிப்பாளர்,
முதியோர்களுக்கான தேசிய செயலகம்.

பின்னிணைப்பு – 1 பி

# முதியோர்களுக்கான தேசிய சபை

## 2017 மார்கழி 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானம் மற்றும் செலவுகளின் அறிக்கை

| விபரம் | குறிப்பு | 2017 (ரூபா) | 2016 (ரூபா) |
|---|---|---|---|
| **செயற்பாட்டு வருமானம்** | | | |
| ஏனைய வருமானம் | 17 | 2,220,526 | 4,667,918 |
| அரச வழங்கல்கள் | 18 | 116,226,114 | 126,925,495 |
| ஒத்திவைக்கப்பட்ட வருமானம் | 19 | 9,405,245 | 9,630,952 |
| **மொத்த வருமானம்** | | **127,851,885** | **141,224,365** |
| | | | |
| **செயற்பாட்டுச் செலவுகள்** | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 20 | 69,983,275 | 66,025,932 |
| பிரயாணச் செலவுகள் | 21 | 1,514,765 | 1,759,166 |
| வழங்கல்கள் மற்றும் அலுவலகத் தேவைப்பாடுகள். | 22 | 1,604,772 | 2,667,439 |
| பராமரிப்புச் செலவுகள் | 23 | 3,176,375 | 1,770,886 |
| ஒப்பந்தச் சேவைகள் | 24 | 3,864,682 | 3,292,911 |
| ஏனைய செயற்பாட்டுச் செலவுகள் | 25 | 37,587,834 | 55,260,549 |
| தேய்மானத்தின் அளவு | 26 | 10,711,649 | 9,630,952 |
| **மொத்த செயற்பாட்டுச் செலவுகள்** | | **128,443,353** | **140,407,835** |
| **குறிப்பிட்ட காலத்திற்கான தேறிய பற்றாக்குறை** | | **(591,468)** | **816,530** |

ஒப்பம்
சிரானி வீரக்கோண்,
தவிசாளர்,
முதியோர்களுக்கான தேசிய சபை.
தேசிய செயலகம்

ஒப்பம்
சுவிந்த எஸ். சிங்கப்புலி,
பணிப்பாளர் (பதில்)
முதியோர்களுக்கான

பின்னிணைப்பு – 1

## முதியோர்களுக்கான தேசிய செயலகம்

2017 டிசம்பர் 31 திகதிய நிதிப்பாய்ச்சல் கூற்று

| விபரம் | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளினூடாக நிதியப் பாய்ச்சல்.** செயற்பாட்டு நடவடிக்கைகள் மேலதிகம்/பற்றாக்குறை | (591,498) | 816,530 |
| **நிதிசாரா செயற்பாடுகள்** | | |
| தேய்மானம் | 10,711,649 | 9,630,952 |
| **தேறிய வருமானம்** | (9,405,245 | (9,630,952) |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| வருட இறுதியில் இருப்பு அதிகரத்தல் | (311,929) | 174,376 |
| ஊழியர் கடன் இனிவருங் காலத்தில் அதிகரித்தல். | (63,242) | (106,561) |
| மீள் நிரப்பப்படாத பண்டிகை முற்பணம் குறைதல் | (365,136) | (1,250) |
| அதிகரித்துள்ள முதலீடு ( நிலையான வைப்பு) | 453,450,008 | (389,000,000) |
| கிடைக்க வேண்டி வாகன வருமானம் | | 881,000.00 |
| கிடைக்க வேண்டிவேறு வருமானம் | (24,202,441) | (754,041) |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | |
| பணிக்கொடை | 2,141,701 | 1,726,072 |
| கணக்காய்வுக் கட்டணங்களின் ஒதுக்கீட்டினை அதிகரித்தல் | 629,490.00 | - |
| ஊழியர் கடன் அதிகரிப்பு | 172,596 | 165,970 |
| பொது வைப்புக்களில் குறைப்பு | (59,829) | (2,153,288) |
| திரண்ட செலவுகளில் | 1,993,082 | 124,714 |
| கடந்த வருடத்தின் இணக்கம் | 836,871 | 1,089,719 |
| **செயலியக்கச் செயற்பாடுகளினூடன தேறிய காசுப் பாய்ச்சல்** | **(471,963,907)** | **(387,036,760)** |
| **முதலீட்டுச் செயற்பாடுகளினூடான தேறிய காசுப் பாய்ச்சல்** | | |
| நிலையான சொத்துக்கள், கொள்வனவு செய்தல். | (2,325,56) | (22,855,597) |
| **நிதிசார் செயற்பாடுகளினூடான தேறிய காசுப் பாய்ச்சல்** | (2,325,056) | (22,855,597) |
| **நிதிசார் செயற்பாடுகளினூடான காசுப் பாய்ச்சல்** | | |
| அரச வழங்கல் (மூலதனம்) | 8,875,947 | 19,785,941 |
| முதியோர் தாபரிப்புத் திட்டம் | (75,000) | (110,000) |
| அரச நிறுவனங்களுக்கு வழங்கவது | (293,432,568) | 293,600 |
| முதயோர் பாதுகாப்பு நிதி | 523,925,568 | 427,704,100 |
| **நிதிசார் செயற்பாடுகளினூடான தேறிய காசுப் பாய்ச்சல்** | **532,432,915** | **447,673,641** |
| நிதி மற்றும் நிதிசார் பாய்ச்சலின் தேறல் அதிகரித்தல் | 58,143,951 | 37,781,281 |
| காலப்பகுதி ஆரம்பத்திலிருந்த நிதி மற்றும் நிதிசார் பாய்ச்சல் | 42,799,797 | 5,018,513 |
| **காலப்பகுதி இறுதியிலிருந்த நிதி மற்றும் நிதிசார் பாய்ச்சல்.** | **100,943,749** | **42,799,797** |

**ஒப்பம்**
சிரானி வீரக்கோண்,
தவிசாளர்,
முதியோர்களுக்கான தேசிய சபை.
தேசியசெயலகம்

**ஒப்பம்**
**சுவிந்த எஸ். சிங்கப்புலி,**
பணிப்பாளர்
முதியோர்களுக்கான

மேலதிக பட்டியல்கள்

| 2016 | குறிப்பு | மூலதன நன்கொடை | 31/12/2017 |
|---|---|---|---|
| 13,000,000.00 | 15 | காணி ஹொலி க்ரோஸ் கம்பஹா | 13,000,000.00 |
| | | காணி- கதிர்காமம் | 18,000,000.00 |
| | | கதிர்காமம் - கட்டிடம் | 33,713,000.00 |
| | | கதிர்காமம் - காணி | 3,200,000.00 |
| | | குறைந்த- ஒத்திவைக்கப்பட்ட வருமானம் | (1,348,520.00) |
| **13,000,000.00** | | மொத்தம் | **66,564,480.00** |

| 2016 | குறிப்பு | நிலையான வைப்பு | 31/12/2017<br>ரூபா |
|---|---|---|---|
| **(13,917,384.62)** | **16** | ஆரம்ப மீதி | (12,011,135.24) |
| **1,089,718.92** | | கடந்த வருட இணக்கம் | - |
| 816,530.46 | | பற்றாக் குறை/மிகைத் தொகை | (591,467,99) |
| (12,011,135.24) | | மொத்தம் | **(12,602,603.23)** |

| 2016 | குறிப்பு<br>17 | வேறு வருமானம் | 31/12/2017<br>ரூபா |
|---|---|---|---|
| 378,643.00 | | வேறு வருமானம் | 390,511.68 |
| 441,264.07 | | நிலையான வைப்பின் வட்டி | 666,707.00 |
| 580,691.35 | | கொடி விற்பனை வருமானம் | 1,161,986.23 |
| | | மொத்தம் | |

| **2016**<br>**(ரூபா)** | **குறிப்பு 20** | | **ஆளுக்குரிய வேதனாதிகள்** | **2017.12.31**<br>**(ரூபா)** |
|---|---|---|---|---|
| 28,211,621.43 | | (I) | சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் | 35,985,752.10 |
| 4,355,437.60 | | (II) | ஊழியர் சேமலாப நிதியம் | 5,408,393.64 |
| 1,081,900.98 | | (III) | ஊழியர் நம்பிக்கை நிதியம் | 1,351,764.14 |
| 497,351.36 | | (IV) | மேலதிக நேரக் கொடுப்பனவு | 419,510.39 |

| | | | | |
|---|---|---|---|---|
| 125,181.05 | | (V) | விடுமுறை தினச் சம்பளம் | 112,118.71 |
| 11,468,517.07 | | (VI) | வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு | 12,009,675.45 |
| 18,292,492.19 | | (VII) | வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு | 11,999,938.78 |
| 1,993,430.00 | | (VIII) | பணிக் கொடை | 2,696,122.00 |
| **54,989,855.75** | | | **மொத்தம்** | **69,983,275.21** |

| **2016 (ரூபா)** | **குறிப்பு 21** | | **பிரயாணச் செலவுகள்** | **2017.12.31 (ரூபா)** |
|---|---|---|---|---|
| 11,360,811.10 | | (I) | உள்நாடு | 1,168,989.00 |
| 398,354.72 | | (II) | வெளிநாடு | 345,775.55 |
| 1,759,165.82 | | | **மொத்தம்** | **1,514,764.55** |

| **2016 (ரூபா)** | **குறிப்பு 22** | | **வழங்கல்கள் மற்றும் அலுவலகத் தேவைப்பாடுகள்** | **2017.12.31 (ரூபா)** |
|---|---|---|---|---|
| 1,704,044.23 | | (I) | எழுதுகருவிகள் மற்றும் அலுவலகத் தேவைப்பாடுகள். | 995,394.91 |
| 939,394.80 | | (II) | எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி | 597,377.05 |
| 24,000.00 | | (iii) | சீருடைகள் | 12,000.00 |
| **2,667,439.03** | | | **மொத்தம்** | **1,604,771.96** |

| **2016 (ரூபா)** | **குறிப்பு 23** | | **பராமரிப்புச் செலவுகள்** | **2017.12.31 (ரூபா)** |
|---|---|---|---|---|
| 1,350,777.35 | | (I) | வாகனங்கள் | 2,456,555.45 |
| 420,108,56 | | (II) | எந்திரப் பொறித் தொகுதிகள் மற்றும் பொருத்துதல்கள். | 719,819.90 |
| **1,770,885.91** | | | மொத்தம் | **3,176,375.35** |

| **2016 (ரூபா)** | **குறிப்பு 24** | **ஒப்பந்தச் சேவைகள்** | **2017.12.31 (ரூபா)** |
|---|---|---|---|
| 183,727.79 | | தபால் மற்றும் தொலைத் தொடர்பாடற் சேவைகள் | 655,547.00 |
| 852,379.81 | | மின்சாரம் மற்றும் எரிபொருள் | 1,791,732.24 |

| | | | |
|---|---|---|---|
| 1,630,725.31 | | சுத்தஞ் செய்வதற்கான கட்டணம் | 278,814.12 |
| 272,318.68 | | வேறு/பத்திரிகை | 34,713.50 |
| 32,358.00 | | சிற்றுண்டிச் செலவுகள் | 76,180.50 |
| 69,628.00 | | வேறு கொடுப்பனவு | 148,999.00 |
| 21,949.00 | | போக்குவரத்து | 240,191.00 |
| 221,329.50 | | வங்கிக் கட்டணம் | 9,015.00 |
| 8,500.00 | | கணக்காய்வுக் கட்டணம் | 629,490.00 |
| 3,817,027.91 | | **மொத்தம்** | 3,864,682.36 |

| 2016 (ரூபா) | குறிப்பு 25 | ஆளுக்குரிய வேதனாதிகள் | 2017.12.31 (ரூபா) |
|---|---|---|---|
| | | கிராமிய முதியோர் சங்கங்களை அமைத்தல் | **1,498,327.50** |
| | | அடையாள அட்டைகளை வழங்குதல் | **483,745.86** |
| | | பகல் நேரப் பராமரிப்பு நிலையங்களை அமைத்தல் மற்றும் சுய தொழில் உதவி வழங்குதல். | - |
| | | பிரசுரங்கள் | **1,695,204.00** |
| | | பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல். | **3,924,349.11** |
| | | மருத்துவ சிகிச்சைகளை நடாத்துதல். கண் வில்லைகள் மற்றும் செவிப்புலக் கருவிகளை வழங்குதல். | **703,410.00** |
| | | சர்வதேச முதியோர் தினக் கொண்டாட்டம் | **15,966,800.50** |
| | | முதியோர் இல்லங்களுக்கு உதவி வழங்குதல் | **2,373,081.82** |
| | | முதியோர்களுக்கான தேசிய சபை அங்கத்தவர்களுக்கான கொடுப்பனவு | **1,003,095.20** |
| | | பராமரிப்புச் சபைக்கானகொடுப்புனவு | **1,048,903.00** |
| | | ரூபா. 2000/=கொடனப்பனவின் நிர்வாகம் சார்செலவுகள் | **5,066,864.48** |
| | | புற்றநோயாளர்களுக்கான உதவி | - |
| | | பயிற்சிகள் மற்றும் திறன் விருத்திப் பயிற்சிகள் | **3,824,052.90** |
| | | மொத்தம் | **37,587,834.37** |

| 2015 (ரூபா) | குறிப்பு 26 | | தேய்மானத்தின் அளவு | 31/12/2016 (ரூபா) |
|---|---|---|---|---|
| 3,064,472.88 | | (I) | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 2,928,169.34 |
| 2,154,500.00 | | (II) | வாகனங்கள் | 2,154,500.00 |
| 4,106,188.92 | | (III) | எந்திரப்பொறித் தொகுதிகள் மற்றும் பொருத்துதல்கள் | 4,114,295.42 |
| 305,789.71 | | (IV) | கட்டிடங்கள் | 1,514,684.03 |
| 9,630,951.51 | | | | 10,711,648.79 |

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கருத்து

முதியோர்களுக்கான தேசிய சபையினால் 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு நிதிக் கூற்று மற்றும் அதே திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான நிதி செயலாற்றுகை மற்றும் நிதிப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கியல் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிப்பு தகவல்களின் சாராம்சம் உள்ளடங்கும் 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான நிதிக் கூற்று, 1971 ஆம் இலக்கம் 38 ஐ கொண்ட நிதிச் சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 2000 ஆம் இலக்கம் 09 ஐ கொண்ட முதியோர்களுக்கான உரிமைகளை பாதுகாக்கும் சட்டத்தின் 20 (3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிஸ குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) ஆம் யாப்பில் உள்ளடங்கும் ஒழுங்குமுறைகளின் பிரகாரம் எனது பணிப்பின ்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதிச் சட்டத்தின் 14 (2) (சீ) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த அறிக்கையுடன் பிரகடனப்படுத்தப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துத் தெரிவிப்பு மற்றும் அவதானிப்பு இந்த அறிக்கையில் தரப்பட்டுள்ளது. நிதிச் சட்டத்தின் 13 (7) (ஏ) பிரிவின் பிரகாரம் விவரமான அறிக்கை ஒன்று சபையின் தலைவருக்கு 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆம் திகதி அனுப்பப்பட்டுள்ளது.

### கணக்காய்வாளர் தலைமையதிபதியின் கருத்து

இந்த அறிக்கையில் 2.2. பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்கள் மூலமான அழுத்தங்கள் தவிர்ந்த, நிதிக் கூற்றுக்கள் மூலம் 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முதியோர்களுக்கான தேசிய சபையின் நிதி நிலைமைகள் மற்றும் அதே திகதியுடன் முடிவுற்ற வருடத்தின் நிதிச் செயற்பாடு மற்றும் நிதி மூலங்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடுகளுக்கு அமைவாகவும் உண்மையாகவும், நியாயமான நிலைமைகளைக் காட்டும் விதத்திலும் உள்ளது என்பது எனது கருத்தாகும்.

எச்.எம் காமினி விஜேசிங்க

கணக்காய்வாளர் நாயகம் (பதில்)

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය
எனது இல.
My No. } எல்ஈடபிள்யு/சீ/என்சீச/1/17/19

ඔබේ අංකය
உமது இல.
Your No. }

දිනය
திகதி
Date } 2018 ஆகஸ்ட் 31

தலைவர்
முதியோர்களுக்கான தேசிய மன்றம்.

සමාජ සුබසාධන හා ග්‍රාමීය සංවර්ධන අමාත්‍යාංශය
17 OCT 2018
අතිරේක ලේකම් ...

**முதியோர்களுக்கான தேசிய மன்றத்தின் 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

முதியோர்களுக்கான தேசிய மன்றத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினது பொழிப்பினை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2000 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க முதியோரக்ளது உரிமைகளைப் பாதுகாக்கும் அதிகாரச் சட்டத்தின் 20(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை மன்றத்தின் தலைவருக்கு 2018 யூலை 26 ஆந் திகதியன்று வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව  இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.  No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34  +94 11 2 88 72 23  ag@auditorgeneral.gov.lk  www.auditorgeneral.gov.lk

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவம் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் தீர்மானிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களால் எழும் தாக்கங்களைத் தவிர, முதியோர்களுக்கான தேசிய மன்றத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயூர்வமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறை அல்லாத சொத்துக்களது பயன்தரு காலம் ஆண்டுதோறும் மீளாய்வு செய்யப்படாமையால் ரூபா 9,470,084 கிரயமுடைய நிலையான சொத்துக்கள் முற்றாகத் தேய்மானத்திற்குள்ளாகியிருந்தபோதும். தொடர்ந்து பயன்படுத்தப்பட்டவாறிருந்தன. அதற்கமைய, ஏற்பட்ட மதிப்பிடப்பட்ட வழுவை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 03 க்கமைய மீளாய்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அலுவலகத்திற்குச் சொந்தமான மல்வது ஹிரிபிடிய எனும் இடத்தில் அமைந்துள்ள காணியை ரூபா 4,200,000 ஆகவும் அக்காணியில் அமைந்துள்ள கட்டிடத்தை ரூபா 16,122,000 ஆகவும் மதிப்பீடு செய்தபோதும், அவற்றை நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கிலிடவில்லை.

(ஆ) முன்னைய இரு ஆண்டுகளிலும் மூன்று முதியோர் இல்லங்களுக்கு நன்கொடையாகக் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 369,928 பெறுமதியான தளபாடங்களும் உபகரணங்களும் அவற்றிற்கு வழங்கப்பட்டுள்ளபோதும், நிறுவனத்தின் நிலையான சொத்துக்களின் கீழ் அவற்றைக் கணக்கிலிட்டு ரூபா 138,240 தேய்மானமாகவும் சீராக்கல் செய்யப்பட்டதன் காரணமாக சொத்துக்களும் தேய்மானமும் அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

3

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பிரதேச அலுவலகங்களிலிருந்து முதியோர்களுக்கான சமூக பாதுகாப்பு நிதியத்திற்குக் கிடைக்க வேண்டிய ரூபா 18,814,700 மற்றும் கொடி விற்பனை மூலம் அந்த அலுவலகங்களிலிருந்து பெற வேண்டிய ரூபா 335,792 என்பன பெற வேண்டியனவாகக் கணக்கிலிடப்படவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு விநியோகிக்கப்படாது எஞ்சிய முதியோர் அமைப்புகளுக்கான இடைக்காலச் சட்டத்தின் எஞ்சிய பிரதிகள் 25,466 ஆகும். இதற்குரிய கிரயமாகிய ரூபா 763,980 எழுதுகருவி வகைக் கையிருப்புக் கணக்கிலிடப்படவில்லை.

(உ) மீளாய்வாண்டினது இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களது தேய்மானம் ரூபா 3,808,742 ஆகியபோதும், அதனை ரூபா 4,114,295 ஆகக் கணக்கிலிட்டமையால் ஆண்டிற்கான தேய்மானம் ரூபா 305,553 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் விடயங்களுக்கெதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | முதியோர் தினம் தொடர்பாக சன்மானம் வழங்குவதற்கான காசோலைகளை வழங்குதல் | 2,625,000 | முதியோர் 105 பேருக்கு வழங்குவதற்கென 48 பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட காசோலைகளைப் பெற்றுக் கொண்டதாக பிரதேச செயலகங்களிலிருந்து உறுதிப்படுத்தல்கள் |
| (ஆ) | முதியோர்களுக்கான படிகளைக் கொடுப்பனவு செய்தல் | 1,780,000 | மாவட்டச் செயலகங்கள் 25, பிரதேச செயலகங்கள் 331 என்பவற்றிற்கு அனுப்பி வைக்கப்பட்ட பணத்தைப் பெற்றுக்கொண்டதாக மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களிலிருந்து உறுதிப்படுத்தல்கள் |

4

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2006 அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.3(அ) பந்தி | சகல இணைந்த செலவினம் உள்ளடங்கலாக மொத்தக் கிரய மதிப்பீட்டை கொள்வனவு நிறுவனம் தயாரிக்க வேண்டுமாயினும், மூலதன உபகரங்களைக் கொள்வனவு செய்வதற்கு மன்றம் மொத்தக் கிரய மதிப்பீட்டைத் தயாரித்திருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் நிதிப்பிரமாணம் 371(5) மற்றும் 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | செயல் நிமித்தக் கட்டு நிதி பணி முடிவுற்ற உடனேயே தீர்த்து வைக்கப்பட வேண்டுமாயினும், 18 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 455,300 கூட்டுத் தொகையுடைய முற்பணமானது பணி முடிவடைந்து 12 முதல் 131 நாட்கள் தாமதமாகி தீர்த்து வைக்கப்பட்டிருந்தன. |
| (இ) 2002 நவெம்பர் 28 ஆந் திகதிய 1A1/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நிறுவனத்திற்குரிய சகல கணனித் துணைப்பாகங்களும் மென் அணிகளும் நிலையான சொத்துப் பதிவேடு ஒன்றில் காட்டப்பட வேண்டியிருந்தபோதும், செயலகத்திற்குரிய ரூபா 10,482,420 பெறுமதியுடைய கணனித் துணைப்பாகங்கள் மற்றும் மென் அணிகளின் பொருட்டு நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்படவில்லை. |
| (ஈ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தி | மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பிக்கையில் வரைவு ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. |

5

| | |
|---|---|
| (உ) 2015 மே 15 ஆந் திகதிய மு.அ 01/2015/01 ஆம் இலக்க நிதி அமைச்சினது சுற்றறிக்கையின் 3(அ) மற்றும் 4(இ) பந்திகள் | வெளிநாட்டு பயிற்சி, கருத்தரங்குகள், கூட்டங்கள், செயலமர்வுகள் என்பவற்றில் பங்குபற்றுகையில் இடைநேர் செலவினமாக உத்தியோகத்தர் ஒருவருக்கு நாளொன்றிற்கு 40 அமெரிக்க டொலர்களே வழங்கப்படலாமெனினும், இரண்டு உத்தியோகத்தர்களுக்கு நாளொன்றிற்கு 75 அமெரிக்க டொலர்கள் வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய, ரூபா 98,492 கூடுதலாக வழங்கப்பட்டிருந்ததுடன், அத்தொகையை மீள அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுமில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மன்றத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலான நிதிப் பெறுபேறு ரூபா 591,468 பற்றாக்குறை ஆகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 816,530 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதிப் பெறுபேற்றில் ரூபா 1,407,998 நலிவு தென்பட்டது. மீளாய்வாண்டினது செலவினம் ரூபா 13,372,480 குறைவடைந்தமையால் நிதிப் பெறுபேறு நலிவடைந்திருந்தது.

முன்னைய ஆண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதிப் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்கையில், 2013 முதல் 2015 வரை பற்றாக்குறை நிலவியபோதும், 2016 ஆம் ஆண்டில் நிதி மிகை ஏற்பட்டு 2017 ஆம் ஆண்டில் மீண்டும் பற்றாக்குறை ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிதிப் பெறுபேற்றில் ஊழியர்களது ஊதியம், நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான தேய்மானம் என்பவற்றை மீண்டும் சீராக்கல் செய்கையில் 2013 ஆம் ஆண்டில் ரூபா 16,523,248 ஆகவிருந்த பங்களிப்பு தொடர்ந்து அதிகரித்து 2017 ஆம் ஆண்டில் ரூபா 46,105,933 ஆகியிருந்தது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

**4.1.1 திட்டமிடல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்தின் நடவடிக்கைகளை குறுகிய கால மற்றும் நெடுங்கால நோக்குடன் முகாமைத்துவமிடுவதற்குக் குறைந்தது 3 ஆண்டுகளுக்கான கூட்டிணைந்த திட்டத்தைத் தயாரித்து அதற்கமைய எண்ணிய இலக்கை அடைவதற்கு இயலுமானவாறு நிறுவனத்தை வழிநடாத்தல் மன்றத்தின் பூரண பொறுப்பாகவுள்ளபோதும், மன்றம் கூட்டிணைந்த திட்டத்தைத் தயாரிக்கவில்லை.

(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம் நிறைவேற்றப்படுவதிலான முன்னேற்றத்தை காலத்திற்குக் காலம் பரிசீலிப்பதற்கான விதிமுறையை மன்றம் அறிமுகஞ் செய்திருக்கவில்லை. அவ்வாறே பல ஆண்டுகளாக ஒரே செயற்பாட்டை செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கியிருந்ததுடன், அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட கடமைகளுக்கேற்ப அது தயாரிக்கப்படவில்லை.

**4.1.2 செயற்பாடும் மீளாய்வும்**

**(அ) மூக்குக் கண்ணாடிகளையும் கேட்கும் உபகரணங்களையும் வழங்குதல்**

மீளாய்வாண்டில் முதியோர்களுக்கு மருத்துவ உபகரணங்களாக 3,530 மூக்குக் கண்ணாடிகளும் 400 கேட்கும் உபகரணங்களும் 10 மருத்துவ முகாம்களை நடாத்துவதற்குமென செயல் நடவடிக்கைத் திட்டத்தினூடாக ரூபா 10,000,000 நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. இது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மூக்குக் கண்ணாடிகளைக் கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டின் மார்ச் மாதத்தில் புதினப் பத்திரைகளில் விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டபோதும், தொழில்நுட்பக் குழுவானது ஒக்டோபர் 31 ஆந் திகதியே நியமனஞ் செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய, டிசெம்பர் 15 ஆந் திகதியன்று கூறு விலைகள் திறக்கப்பட்டு ஒவ்வொன்றும் ரூபா 5,500 வீதப்படி ரூபா 5,775,000 க்கு 1,050 மூக்குக் கண்ணாடிகளைக் கொள்வனவு செய்வதற்கெனத்

தனியார் நிறுவனம் ஒன்று தெரிவு செய்யப்பட்டிருந்தது. பொருட் கொள்வனவு வழிகாட்டலின் மேலதிக இலக்கம் 31 இன் பிரகாரம் பொருட் கொள்வனவு நடவடிக்கைகள் 04 வாரங்களுக்குள் முடிவடைய வேண்டுமாயினும், மீளாய்வாண்டின் டிசெம்பர் வரை குறித்த கொள்வனவுகள் நடைபெற்றிருக்கவில்லை.

(ii) மன்றம், 400 கேட்கும் உபகரணங்களைக் கொள்வனவு செய்து விநியோகிப்பதற்குத் திட்டமிட்டிருந்தபோதும், மீளாய்வாண்டின்போது இது தொடர்பாக எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

(iii) மருத்துவ முகாம்களை நடாத்துவதற்காக 09 மாவட்டச் செயலகங்கள் கோரியிருந்த ரூபா 776,050 வழங்கப்பட்டிருந்தபோதும், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வழங்கப்படக் கூடிய நிதியேற்பாடு எவ்வளவு எனத் திட்டமிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இம் மருத்துவ முகாம்களுக்கு மீளாய்வாண்டின் இறுதி 02 மாதங்களின்போது பணம் வழங்கப்பட்டிருந்ததுடன், அம் மருந்துவ முகாம்கள் நடைபெற்றதற்கான செலவின விபரத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் மன்றம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. எவ்வாறாயினும், அவ்வாண்டின்போது மருத்துவ முகாம்கள் நடாத்தப்பட்டனவா என்பது கணக்காய்வில் உறுதியாகவில்லை. இதற்கமைய, குறித்த ஆண்டிற்கான திட்டம் அவ்வாண்டின்போதே முற்றாக அமுலாகாது 92 சதவீத நிதியேற்பாடு எஞ்சியிருந்தது.

**(ஆ) ஆராய்ச்சிப் பயிற்சி மற்றும் அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள்**

மீளாய்வாண்டினது செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், 12 பயிற்சி மற்றும் அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ரூபா 8,575,000 மற்றும் பயிற்சி மற்றும் ஆற்றலை அபிவிருத்தி செய்யும் 04 நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ரூபா 4,000,000 என நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், அந்நிகழ்ச்சித் திட்டங்களுக்கு முறையே ரூபா 3,949,136 மற்றும் ரூபா 3,824,052 எனச் செலவிடப்பட்டிருந்தது. பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அலுவலகத்தால் மீளாய்வாண்டின்போது 04 பயிற்சி மற்றும் ஆற்றலை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் 02 தலைமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்குத் திட்டமிட்டிருந்தபோதும், ஒரு நிகழ்ச்சித் திட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

(ii) மீளாய்வாண்டிற்கெனத் திட்டமிடப்பட்ட பயிற்சி மற்றும் ஆற்றலை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படாததால் அச்செலவினத் தலைப்பின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 1,071,000 எதிர்வரும் ஆண்டின் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தால் நடாத்தப்படும் விஞ்ஞான டிப்ளோமாவிற்குப் பயன்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டினது வரவு, செலவுத் திட்ட நிதியேற்பாட்டில் தேசிய வரவு, செலவுத் திட்டத் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி எதிர்வரும் ஆண்டிற்கெனப் பயன்படுத்தப்பட்டிருந்தபோதும், 21 அலுவலக உத்தியோகத்தர்கள் இக்கற்கை நெறியில் பங்கேற்றிருக்கவில்லை.

**(இ) முதியோர்களது தரவுகளை நாளதுவரையாக்கல்**

---

முதியோர்கள் தொடர்பான சரியான மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட புள்ளி விபரப் பதிவேட்டைப் பேணுவது மன்ற அதிகாரவ் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட கடமைகளுள் ஒன்றாகும். அதன் பொருட்டு பிழையற்ற நடைமுறையைப் பேண வேண்டுமென பொது முயற்சிகளுக்கான குழு பரிந்துரை செய்திருந்தது. அதற்கமைய, முன்னைய ஆண்டின் முதியோர் தினமாகிய ஒக்டோபர் 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட இணையதளத்தினூடாக இலங்கையின் 25 மாவட்டங்களிலும் உள்ள முதியோர் இல்லங்கள், முதியோர் குழுக்கள், முதியோர் பகல் நேரப் பாதுகாப்பு நிலையங்கள், முதியோர் புள்ளி விபரம் என்பவற்றை உள்ளடக்குவதற்குத் திட்டமிடப்பட்டு இத்தரவுகளை இணையத்தளத்தில் சேர்த்துக் கொள்வதற்கு முதியோர் உரித்தைப் மேம்படுத்தும் உத்தியோகதர்களுக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், தரவு முறைமை நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) முதியோர் தின நிகழ்ச்சிகள்**

---

மீளாய்வாண்டிற்கான சர்வதேச முதியோர் தினம் ஒக்டோபர் 01 ஆகும். அதனை நினைவு கூர்வதற்காக செயல் நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் ரூபா 16,000,000 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பொருட்டு 08 பணிகள் உள்ளடங்கலாக ரூபா 18,758,000 க்கான மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், ரூபா 15,966,800 செலவழிக்கப்பட்டுமிருந்தது. பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

9

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

(i) சர்வதேச முதியோர் தினத்தை நினைவு கூர்வதற்காக 122 பிரதேச செயகலகங்களில் உள்ள 100 வயதைக் கடந்த 213 பேர் மற்றும் 65 பிரதேச செயலகங்களில் 75 வயதைக் கடந்த அதிக எண்ணிக்கையிலான பிள்ளைகளைக் உடைய 78 முதிய வயதுடைய தாய்மார்களுக்கு ரூபா 25,000 வீதம் 7,275,000 வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், 2017 நவெம்பர் 23, 24 ஆகிய இரு தினங்களிலும் ரூபா 7,100,000 பெறுமதியான 184 காசோலைகள் வரையப்பட்டு, அவற்றில் கைச்சாத்திடப்பட்டு ஏறக்குறைய 45 நாட்கள் தாமதததின் பின்னர், அதாவது 2018 சனவரி 16 ஆந் திகதி பிரதேச செயலகங்களுக்கு அவை நேரடியாக அஞ்சலில் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

(ii) 2018 பெப்ரவரி இறுதி வாரமளவில் இத்தொகை முதியோரைச் சென்றடைந்திருந்தபோதும், பணத்தைப் பெற்றுக் கொண்டதற்கான உறுதிப்படுத்தல் பெறப்படவில்லை.

(iii) நூறு வயதைக் கடந்தோருக்கு சன்மானம் வழங்கப்படுவதும் 75 வயதைக் கடந்த, அதிக எண்ணிக்கையிலான பிள்ளைகளை உடைய தாய்மாருக்கு சன்மானம் வழங்குவதுமாகிய 02 விடயங்களும் இம் முதியோர் தினத்தின் பிரதான பணியாகியமையால், முதியோர் தினத்திலேயே அச்சன்மானத்தை வழங்குவதற்கு இயலுமாயிருந்தும் அத்தினம் முடிவடைந்து ஏறக்குறைய 04 மாதங்களின் பின்னர் சன்மானம் வழங்கப்பட்டிருந்தது. அத்தொகையை பெறும் தறுவாயில் முதியோரில் அநேகர் மரணமடைந்து விட்டமை புலனாயிற்று. முதியோராக சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய ஒரு நோக்கத்தினை நிறைவேற்றுவதில் இத்தகைய தாமதம் நிலவுவதானது முகாமைத்துவத்தின் நலிவு ஆகும் எனக் கணக்காய்வில் சுட்டிக் காட்டப்படுகின்றது.

**(உ) முதியோர் தினத்தின் பொருட்டு கொடி மற்றும் ஸ்டிக்கர் விற்பனை**

முதியோரின் பொருட்டு கொடி வாரம் ஒன்றை ஆரம்பித்து ரூபா 979,558 செலவில் 2,310,000 கொடிகளும் 33,100 ஸ்டிக்கர்களும் அச்சிடப்பட்டிருந்தன. அக்கொடிகளும் ஸ்டிக்கர்களும் விநியோகிக்கப்படுவதற்காக ரூபா 115,615 செலவழிக்கப்பட்டு 25 மாவட்டச் செயலகங்களுக்கும் 317 பிரதேச செயலகங்களுக்கும் 2,302,400 கொடிகளும் 20 மாவட்டச் செயலகங்களுக்கு 28,200 ஸ்டிக்கர்களும் விநியோகிக்கப்பட்டிருந்தன. ஒரு கொடி ரூபா 10 ஆகவும் ஒரு ஸ்டிக்கர் ரூபா 100 ஆகவும் விலையிடப்பட்டிருந்ததுடன்,

10

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

கொடிகளினதும் ஸ்டிக்கர்களினதும் முகப் பெறுமதி ரூபா 26,410,000 ஆகவுமிருந்தது. பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இருபத்தைந்து மாவட்டங்களுக்கு வழங்கப்பட்ட 2,302,400 கொடிகளில் 1,856,322 கொடிகள் 317 பிரதேச செயலகங்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்தன. அதற்கமைய, எஞ்சிய 446,078 கொடிகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கொடிகளையும் ஸ்டிக்கர்களையும் விற்பனை செய்வதன் மூலம் பெறப்படும் பணத்தில் 35 சதவீதம் அல்லது ரூபா 11,658,500 நிறுவனத்தைச் சேர்வதுடன் நிறுவனத்தில் பெறப்பட்ட தொகை ரூபா 826,194 ஆகும். அவ்வாறே, மீளாய்வாண்டில் 230 பிரதேச செயலகங்களில் 71 சதவீதமான 1,653,460 கொடிகள் அழிக்கப்பட்டிருந்தன. அவ்வாறு எஞ்சிய மற்றும் அழிக்கப்பட்ட 1,728,882 கொடிகளை அச்சிடுவதற்குத் செலவான கிரயம் ரூபா 587,799 ஆகும். அது நிர்வாகத்திற்கு ஏற்பட்ட நட்டமாகும். இதற்கமைய, கொடிகளை அச்சிடுதலும் விநியோகித்தலும் மற்றும் விற்பனை செய்தலும் விற்பனை வருமானத்தைச் சேகரித்தலும் ஆகியவற்றில் நிறுவனம் போதிய கவனஞ் செலுத்தியிருக்கவில்லை.

(iii) இருபது மாவட்டச் செயலகங்களுக்கு 28,200 ஸ்டிக்கர்கள் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 13 மாவட்டங்களில் 2,490 ஸ்டிக்கர்கள் விற்பனையாகியமை அவதானிக்கப்பட்டது. இதற்கமைய, 25,710 ஸ்டிக்கர்கள் விற்பனையாகியதாகத் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன், அந்த ஸ்டிக்கர்களது அச்சிடற் கிரயம் ரூபா 159,753 ஆகவுமிருந்தது.

**(ஊ) முதியோருக்கான பகல் நேர பாதுகாப்பு நிலையங்களைப் பராமரித்தல்**

2017 சனவரியில் முதியோருக்கான பகல் நேர பாதுகாப்பு நிலையங்களுக்கான வழிகாட்டிக் கோவை தயாரிக்கப்படுவது ஆரம்பிக்கப்பட்டிருந்தபோதும், அது முடிவுறவில்லை. அவ்வாறே, 150 முதியோருக்கான பகல் நேர பாதுகாப்பு நிலையங்கள் இனங்காணப்பட்டிருந்தபோதும், முதியோர் செயலகத்தால் உதவித் தொகை வழங்கப்பட்டிருக்கவில்லை.

11

**(ஏ) முதியோர் இல்லக் கண்காணிப்பு**

இலங்கையில் உள்ள முதியோர் இல்லங்களது எண்ணிக்கை 306 ஆகும். அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள எண்ணிக்கை 119 ஆகும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டில் இம்முதியோர் இல்லங்களில் 19 மாத்திரமே அலுவலகத்தால் பரிசோதனைக்குள்ளாகியிருந்தன.

**(ஏ) அதிகாரச் சட்டத்தின் நோக்கம் நிறைவேறாமை**

2000 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க முதியோர்களது உரிமைகளைப் பாதுகாக்கும் அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் முதியோரின் பொருட்டு தேசிய மன்றம் பின்வரும் பணிகளை மீளாய்வாண்டில் அமுலாக்கவில்லை.

(i) முதியோர் தொடர்பான சரியாக மற்றும் நாளதுவரையாக்கிய புள்ளி விபரப் பதிவேடுகளைப் பேணுதல்.

(ii) முதியோர்களது பிரச்சினைகளுக்கான பிரதான காரணங்கள் மற்றும் அவர்களது தேவைகள் மற்றும் அபிலாஷைகள் ஆகியவற்றை இனங்காணும் நோக்குடன் ஆய்வுகளையும் ஆராய்ச்சிகளையும் மேம்படுத்துதல் மற்றும் அக்காரணங்களை இல்லாதொழிப்பதற்குத் அல்லது முளையிலேயே கிள்ளி எறிவதற்கும். அவர்களது அத்தேவைகள் மற்றும் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தலும்.

(iii) முதியோர்களது பிரச்சினைகளுக்கான தகைமையையும் அபிலாஷைகளையும் பொது மக்களுக்கு அறிவுறுத்துதல்.

(iv) முதியோர்களது நிலைமையை உயர்த்துவதற்கு அரசாங்கத்தாலும் அரச சார்பற்ற நிறுவனங்களாலும் தனியார் சபைகளாலும் ஆரம்பிக்கப்பட்ட மற்றும் செயற்பட்டவாறுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் திட்டங்களையும் கணிப்பிடுதலும் அவற்றை ஒருங்கிணைத்தலும்

(v) முதியோர்களின் பொருட்டு சுகாதார பாதுகாப்பு நலன் திட்டம் ஒன்றை அறிமுகம் செய்வதும் அதனைச் செயற்படுத்தலும்

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

(vi) முதியோர்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு முதியோர்களின் பொருட்டான சம்பளம் வழங்கும் மற்றும் சம்பளம் வழங்காத வேலை வாய்ப்புகள் தொடர்பான பெயர்ப் பட்டியல் ஒன்றைப் பேணுதலும் இயலுமான சகல சந்தர்ப்பங்களிலும் அவர்களை வருமானத்தை ஈட்டக் கூடிய துறைகளில் ஈடுபடுத்துவதற்காக உதவியளித்தலும் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு முதியோர்களது ஆற்றலையும் திறமையையும் உள்ளடக்கியவாறான பெயர்ப் பட்டியல் ஒன்றைப் பேணுதலும்

**4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்**

-----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிரேஷ்ட பிரஜைகளான 75 வயதுக்குட்பட்வர்களுக்கு மருத்துவக் காப்புறுதித் திட்டமொன்றைத் தொடங்குவதற்கும் 65 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களின் பொருட்டு பொதுப் போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்குமென முதியோர்களுக்கான தேசிய கொள்வனவு ஒன்றைத் தயாரிப்பதற்கு முன்னைய ஆண்டில் ரூபா 5,000,000 பெறப்பட்டிருந்தது. இதில் ரூபா 3,305,836 அவ்வாண்டிலேயே முதியோர் செயலகத்திலும் 331 பிரதேச செயலகங்களிலும் அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு செலவிடப்பட்டிருந்தது. அதில் எஞ்சிய ரூபா 1,694,164 பொது வைப்புக் கணக்கிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கணக்காய்வுத் திகதியான 2018 யூன் 30 ஆந் திகதியளவில் 02 ஆண்டுகள் கடந்தும் கொள்கைப் பிரகடனம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை

(ஆ) தேசிய முதியோர் செயலகத்திற்கு, முதியோர் பாதுகாப்பு நிலையம் ஒன்றை பேணுவதற்காக 2009 ஆம் ஆண்டில் வெகுமதி உரித்துறுதியின் மூலம் பெறப்பட்ட 02 ஏக்கர்களில் நிவித்திகல நில்வளா செவன ஊனமுற்றோர் நிலையத்தின் காணயும் கட்டிடமும் மதிப்பிடப்பட்டுச் சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, அந்த ஆண்டிலேயே ரூபா 390,000 செலவில் அக்கட்டிடத்தில் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு வரை அது எதற்கும் பயன்படுத்தப்படாது மூடியவாறு இருந்தமையால் குறித்த நபர்கள் இக்காணியை மீண்டும் ஒப்படைக்குமாறு கோரி வழக்குத் தொடுத்திருந்தனர்.

13

(இ) 2003 முதல் 2013 வரை நிறுவனம் கொள்வனவு செய்த ரூபா 26,715,433 பெறுமதியான தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள், இயந்திர சாதனங்கள் என்பன ஒவ்வொரு ஆண்டின்போதும் சொத்து வகைப்படுத்தப்படுதலுக்கு உட்படுத்தப்படாது ஆண்டின்போது கொள்வனவு செய்யப்பட்ட மொத்தப் பெறுமதியும் நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டதால் கைதவிர்ப்புச் செய்ய வேண்டிய மற்றும் பயன்படுத்தப்படாத சொத்துக்களை இனங்காண முடியாதிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின்போது ஓய்வுபெற்ற 06 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 104,445 கூடுதலாகப் பணிக்கொடை வழங்கப்பட்டிருந்தபோதும், அறிக்கைத் தினம் வரை அது அறவிடப்படாதிருந்தது.

### 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ)

(i) எழுபது வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் ரூபா 2,000 முதியோர் படியில் மீண்டும் ரூபா 100 பிரதேச செயலகங்களால் முதியோர் செயலகத்திற்கு வழங்கப்படுவதுடன் அதன் மூலம் ஆற்றக் கூடிய 10 பணிகள் சம்பந்தமாக முன்னைய ஆண்டின் ஆகஸ்ட் 30 ஆந் திகதிய அமப/16/0719/711/010 இலக்கமுடைய அமைச்சரவைக் குறிப்பின் மூலம் அங்கீகாரமும் பெறப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டின் பெப்ரவரி தொடக்கம் மீளாய்வாண்டு வரை பெறப்பட்டிருந்த தொகை ரூபா 860,094,400 ஆகும். குறித்த பணிகளை நிறைவேற்றாது பெறப்பட்டவற்றுள் ரூபா 841,783,300 குறுகிய கால நிலையான வைப்புகளில் 02 அரச வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டிருந்தன.

(ii) பிரதேச செயலகங்களால் முதியோர் படியிலிருந்து அறவிடப்படும் ரூபா 100 காசோலை மூலம் அனுப்பிவைக்கப்படுவதுடன் அதன்போது வழுக்களுடன் கூடிய காசோலைகள் நிறுவனத்தால் மீண்டும் அதே பிரதேச செயலகங்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுமிருந்தன. அதற்கமைய, மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 54 பிரதேச செயலகங்களிலிருந்து ரூபா 19,738,200 அறவிடப்பட வேண்டியிருந்ததுடன், அத்தொகையை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுமில்லை.

(ஆ) நிலையான வைப்பு முதிர்வடையும்போது நிறுவனம் அதனை மீள முதலீடு செய்கின்றது. அவ்வாறு முதிர்வடைந்த ரூபா 577,394,762 பெறுமதியான நிலையான வைப்புக்கள் மீண்டும் முதலீடு செய்யப்படுவதற்கு முன்பு 07 முதல் 67 நாட்கள் வெறுமனே இருந்ததால் ரூபா 2,675,830 வட்டி இழப்பிற்குள்ளாகியிருந்தது.

**4.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

முதியோர்களுக்கான தேசிய மன்றத்தின் அங்கத்தவர் ஒருவர் தமது பிரத்தியேக வெளிநாட்டுப் பயணத்திற்குச் செலவிட்ட ரூபா 59,800 முதியோர்களுக்கான செயலகத்தால் மீளாய்வாண்டின்போது மீள வழங்கப்பட்டிருந்தது.

**4.5 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கல்**

முதியோர் இல்லங்களை நிர்மாணிப்பதற்கு 2011 ஆம் ஆண்டின்போது நிறுவனத்திற்கு வெளி நபர்களால் வெகுமதி உரித்துறுதிகளின் மூலம் ரூபா 13,000,000 பெறுமதியான கம்பஹா ஹோலிகிறொஸ் காணி மற்றும் ரூபா 3,200,000 பெறுமதியான ஹாரகம ராஜிதவத்தை காணி என்பன வழங்கப்பட்டிருந்தபோதும், இல்லங்களை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் இயலாது போனமையால் அக்காணிகள் பயனற்றிருந்தன.

**4.6 பதவியணி நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முதியோர்களுக்கான தேசிய செயலகத்தில் மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறிருந்த அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரது எண்ணிக்கை 143 ஆகும். உள்ளவாறான பதவியணியினரது எண்ணிக்கை 133 ஆகும். அதற்கமைய, 10 வெற்றிடங்கள் நிலவின. 2011 ஆண்டு தொடக்கம் வெற்றிடமாக இருந்த உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) பதவி மற்றும் சட்ட உத்தியோகத்தர் பதவி என்பன 2018 மே 31 ஆந் திகதியளவிலும் வெற்றிடமாகவே இருந்தன.

(ஆ) உதவிப் பணிப்பாளர் (தகவல்கள் மற்றும் ஊடகத் தொழில்நுட்பம்) பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்கு 2017 சனவரி 11 ஆந் திகதியன்று முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டிருந்தபோதும், கணக்காய்வுத் தினமான 2018 மே 18 ஆந் திகதியளவிலும் அதன் பொருட்டு உத்தியோகத்தர் ஒருவர் ஆட்சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

15

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

(இ) நுவரெலியா மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள பிரதேச செயலகங்களில் முதியோர் உரித்து மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் எவருமே நியமிக்கப்பட்டிராததுடன், இரத்தினபுரி மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களில் தேவையான எண்ணிக்கையிலும் குறைவாகவே உத்தியோகத்தர்கள் பிரதேச செயலகங்களில் பணியிலமர்த்தப்பட்டிருந்தனர்.

## 5. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி

### 5.1 நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கத்தை அடைதல்

நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் சகல அரச நிறுவகங்களும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டியுள்ளதுடன், மீளாய்வாண்டின் பொருட்டு முதியோர்களுக்கான தேசிய மன்றம் தனது பரப்பெல்லைக்குள் வரும் பணிகள் சம்பந்தமாக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை அறிந்திருக்கவில்லை. அவ்வாறு அறிந்திராமையால் அப்பணிகள் சம்பந்தமான நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கத்தையும் இலக்கையும் இனங்கண்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 உள்ளகக் கணக்காய்வு

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 09 ஆம் பந்தியின் பிரகாரம் காலாண்டுக்கு ஒருமுறை உள்ளகக் கணக்காய்வு அறிக்கை தயாரிக்கப்பட வேண்டுமாயினும்ஈ அவ்வறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.2 பொருட் கொள்வனவு

நிறுவனம் மீளாய்வாண்டின்போது தயாரித்த பொருட்கொள்வனவுத் திட்டத்தின் பிரகாரம் மூலதன உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு மீளாய்வடிண்டின் மார்ச் முதல் நவம்பர் வரை 06 சந்தர்ப்பங்களில் திறைசேரியிடமிருந்து ரூபா 8,875,947 பெறப்பட்டிருந்தது. ஆண்டின்போது நிறுவனம் கொள்வனவு செய்த உபகரணங்களது பெறுமதி ரூபா 2,325,055 ஆகும். 63 கணனிகளைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் டிசெம்பர் 31 வரை தாமதமகியதால் 73 சதவீதமான ரூபா 6,550,892 பயன்படுத்தப்பட முடியாது போனது. அதற்கமைய பொருட் கொள்வனவுச் செயற்பாடானது நிறுவனத் தேவைகளை ஈடுசெய்யக்கூடியவாறு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

16

**6.3 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு**

வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட வருமானத்தையும் செலவினத்தையும் உள்ளவாறான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பிடுகையில் 26 முதல் 93 சதவீதம் வரையிலான வேறுபாடுகள் அவதானிக்கபட்டமையால் வரவு செலவுத் திட்டமானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**7. முறைமைகளும் கட்டுபாடுகளும்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது தேசிய மன்றத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத்துறை | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) கணக்கீடு | சொத்துக்களும் நன்கொடைகளும் முறைப்படி கணக்கிலிடப்படாமை |
| (ஆ) பதவியணி நிர்வாகம் | பதவியணி வெற்றிடத்தால் மன்றத்தின் நோக்கம் நிறைவேறுவது தடைப்படுதல் |
| (இ) நிதியக் கட்டுப்பாடு | முதியோர்களுக்கான சமூகப் பாதுகாப்பு நிதியத்தை பயன்படுத்தாது இருத்தல். |
| (ஈ) காணி அபிவிருத்தி | நன்கொடையாக பெறப்படும் காணியை நோக்கத்தின் பொருட்டு பயன்படுத்தாமை. |

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

17

செயலாளர்,
சமூக நலன்புரி மற்றும் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சு,
தவிசாளர்,
முதியோர்களுக்கான தேசிய சபையினூடாக,
கணக்காய்வாளர் அதிபதி,
கணக்காய்வாளர் அதிபதி திணைக்களம்,
பத்தரமுல்ல.

**முதியோர்களுக்கான தேசிய சபையின் 2017 திசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிசார் கூற்று தொடர்பில் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2) (சி) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை.**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பில் கணக்காய்வாளர் அதிபதியினால் முன்வைக்கப்பட்ட எல்ரிடபிள்யு/என்சிஇ/1/17/19 என்ற இலக்க மற்றும் 2018.07.16 ஆந் திகதிய நிதிச் சட்டத்தின் 14(2)(சி) பிரவின் பிரகாரம் 2017.12.28 ஆந் திகதி முதியோர்களுக்கான தேசிய சபைக்கு அறிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பிலான பிரேரிக்கப்பட்ட செயற்பாடுகளை பின்வருமாறு தயவுடன் முன்வைக்கின்றேன்.

கணக்காய்வாளர் அதிபதி அறிக்கையின் பிரகாரம் பந்தி இலக்கங்கள்.

**2. நிதிசார் கூற்று**

2.1. நிதிசார் கூற்றுக்கள் தொடர்பில் கருத்துக்களை எடுத்துக் காட்டுதல்
2.1.1. இலங்கை அரச துறைகளின் கணக்கீட்டு நியமங்கள்.

இது வரையில் அது தொடர்பில் மீள் மதிப்பீட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அந்நியமிக்கப்பட்ட குழுவினூடாக மீள் மதிப்பீட்டு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு உரிய ஆரம்பச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

**2.2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்**

(அ) மற்றும் (ஆ)

பணிக்கொடையினைக் கணிப்பிடுவது தொடர்பில் பூர்த்தி செய்யப்படாத சேவைக் காலப்பகுதியினைக் கணிப்பிடுதல், 2014 நவம்பர் 17 ஆந் திகதிய சுற்றுநிரூபம் தொடர்பில் உத்தியோகத்தர்கள் விழிப்புணர்வூட்டப்படாததன் காரணத்தினால் இந்த அதிகமான கணிப்பிடுதல், இனிவருங்காலங்களில் இடம்பெறாமலிருப்பதற்கு பொறுப்பு நிற்பதாக அறியத்தருகின்றேன். இந்நிதியினை ஊழியர்களிடமிருந்து எதிர்வரும் காலங்களில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

(ஆ) 2018 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கினூடாக சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(இ) 2015 ஆம் ஆண்டில் ரூபா. 418,088/- நிதி, மரத் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணக் கணக்குக்கு உள்ளடக்கப்பட்டு நிலையான சொத்துப் பதிவேட்டில் குறிப்பிட்டு மீதி காணப்பட்டுள்ளது என்பதைக் கணக்காய்வில் எடுத்துக் காட்டியபோதும் அதில் உள்ளடக்கப்பட்டவாறு கண்டி கொடகேவா முதியோர் இல்லத்திற்கு ரூபா. 273,428/- உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது எனவும் ரூபா. 96,500/- மதிரிகிரி முதியோர் இல்லத்திற்கு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் முதியோர் இல்லங்களுக்குப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான செலவுகளான ரூபா. 369,928/- நிதியினை நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் நீக்கி சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் மீதி ரூபா. 43,160/- நிதியில் கட்டுவன பிரதேச செயலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அந்நிதி நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் மரத் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணக் கணக்கில் குறிப்பிட்டு சரிசெய்யப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிடுகின்றேன்.

(ஈ) இச் செயற்பாட்டில் ஏதேனும் கணக்கீட்டுக் குறைபாடு இருப்பின், இனிவருங் காலங்களில் கணக்கீட்டுக் கொள்கையில் மாற்றமொன்றினைச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகக் குறிப்பிடுகின்றேன்.

(உ) முதியோர் அமைப்புக்களுக்கான இடைக்கால யாப்பின் பிரதியொன்று இதுவரை பகிர்ந்தளிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், தாங்கள் குறிப்பிட்டுள்ளவாறு பெறுமதி ரூபா. 763,980/- புத்தகங்களின் பெறுமதிச் செலவொன்றாகக் கவனத்திற் கொண்டு கணக்கிடப்பட்டுள்ளது.

(ஊ) எந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் தேய்மானப் பெறுமதியான 4,114,295 மதிப்பீடு 2017 ஆம் ஆண்டின் நிதிசார் கூற்றில் கூறப்பட்டுள்ள சரியான பெறுமதியாகும்.

**2.2.2. கணக்காய்வு தொடர்பில் சான்றுகள் இல்லாமை.**

(அ) உரிய பிரதேச செயலகங்கள் தொடர்பில் இடம்பெற்ற பின்னூட்டற் செயற்பாடுகளின் பின்னர் இதுவரை அது தொடர்பிலான உறுதிப்படுத்தும் பல சான்றுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

(ஆ) 331 பிரதேச செயலகங்களுக்கு அனுப்பப்பட்ட நிர்வாகச் செலவுகள் ரூபா. 5,000/-, உரிய பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்டச் செயலகங்கள் 200 இல் இருந்து இதுவரை பற்றுச்சீட்டுக்கள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன் மீதிப் பற்றுச்சீட்டுக்களையும் வரவழைத்துக் கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

(இ) 2015 ஆம் ஆண்டிலிருந்து நிலையான சொத்துக்கள் பதிவேடொன்றினை முன்னெடுத்துச் செல்லுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு முன்னர் பாவிக்கப்பட்ட

சகல நிலையான சொத்துக்களை வெவ்வேறாக அடையாயங் காண்பறக்குத் தேவையான நடவடிக்கைகளை 2018 ஆம் ஆண்டில் மீள் மதிப்பீட்டுக் குழுவொன்றினை நியமித்து அதனூடாக முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**2.2.3. சட்டங்கள், ஒழுங்கு விதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை.**

(அ) நிர்மாணிப்புச் செயற்பாடுகளின்போது மொத்தக் கிரய மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டும் எனினும் இச் செயற்பாடுகளுக்கு மொத்தக் கிரய மதிப்பீடொன்று தேவையற்றது என அறிந்துகொண்டதன் காரணத்தினால் தயாரிக்கப்படவில்லை. எதிர்வரும் காலங்களில் இடம்பெறும் நிர்மாணச் செயற்பாடுகளின்போது மொத்தக் கிரய மதிப்பீட்டினைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது

(ஆ) 1. சிறு நிதி முற்பணம் 2017 திசம்பர் 31 ஆந் திகதியன்று மீள் நிரப்பப்பட்டுள்ளது.

2. உரிய பணி பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் 07 நாட்களுக்குள் கொடுப்பனவினைச் செலுத்துதல் பரிந்துரை செய்யப்பட்டு கணக்குப் பிரிவுக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

(இ) திறைசேரி சுற்றுநிரூப இலக்கம் /2002/02 ற்கு அமைய கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பில் நிலையான சொத்துக்களுக்கான பதிவேடொன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

(ஈ) உரிய சுற்றுநிரூபத்தின் பிரதியொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 01).

**03. நிதிசார் மீளாய்வு**

**3.1. நிதி சார் விளைவு**

04. **செயல் மீளாய்வு**

**4.1. செயற்திறன்**

**4.1.1. திட்டமிடுதல்.**

4.1.2. **செயற்பாடு மற்றும் மீளாய்வு**

(அ) **கண்வில்லை மற்றும் செவிப்புலக் கருவிகளை வழங்குதல்**

**I.** **2017** ஆம் ஆண்டில் கண்வில்லையினை வழங்குதல் தொடர்பில் கொள்முதல் செயற்பாடுகளை முன்னெடுத்து முடிக்கும்போது 2017 ஆம் ஆண்டு முடிவுற்றதால், கொள்வனவு செய்வதற்கு போதிய காலம் இல்லாமையினால் இவ் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுவதற்கு முடியாமற் போனது. ஆதலால் கண் வில்லைகளைக் கொள்வனவு செய்யும் செயற்பாட்டினை முன்னெடுப்பதற்கு முடியாமற் போனது.

II. சுகாதார அமைச்சினால் 2 வைத்தியர்களை வழங்குமாறு சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்திற்கு செய்யப்பட்ட வேண்டுகோளுக்கமைய, பெயரிடப்பட்டு அனுப்பப்பட்டுள்ள வைத்தியர்களினூடாக செவிப்புலக் கருவிகளைக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான விபரக் குறிப்பினைத் தயாரிப்பதில் இடம்பெற்ற தாமதத்தின் காரணமாக, ஆண்டு நிறைவடைந்தும் செவிப்புலக் கருவிகளைக் கொள்வனவு செய்யும் செயற்பாட்டினை முன்னெடுப்பதற்கு இயலாமற் போனது.

III. மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்யும்போது கொள்முதல் செயற்பாட்டின் ஆரம்பச் செயற்பாடுகளுக்கு அந்தந்த மருத்துவப் பிரிவுகளின் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் என்பதால் அது தொடர்பில் எடுத்த பல்வேறான முயற்சிகள் தோல்வியடைந்தமையின் கீழ் அப்பணியில் 100% முன்னேற்றமொன்றினை அடைய முடியாமற் போனது.

2018 ஆம் ஆண்டில் முதியோர் சமூகப் பாதுகாப்பு நிதியத்திலிருந்து இந்நிகழ்ச்சித திட்டத்திற்கு ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இக்கண் வில்லைகளை வழங்குதல் அரச வைத்தியசாலைகளுடன் இணைந்து இடம்பெறுவதால், உரிய பிரதேச செயலகங்களின் அதிகார எல்லைகளில், கோருபவர்கள் தொடர்பில் கண்வில்லைகளைப் பெற்றுக்கொள்ளும் இயலுமையினைக் கொண்ட வைத்தியசாலைகளின் பெயர்பட்டியலினை பெயரிட்டு அனுப்புமாறு 2018.07.10 ஆந் திகதி கடிதத்தினூடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஆ) **<u>புற்றுநோயாளர்களுக்கான உதவிகளை வழங்குதல்</u>**.

2018.06.04 ஆந் திகதி மகரகம புற்றுநோய் வைத்தியசாலையில் நடாத்தப்பட்ட புற்றுநோய் பயனாளிகளுக்கு போசாக்கான உணவுகள், சக்தி நிறைந்த பால்மா வகைகள் போன்றனவற்றினை வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. (இணைப்பு 2)

(இ) **<u>பயிற்சி ஆய்வுகள் மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள்.</u>**

I. இதில் ஒரு நிகழ்ச்சித் திட்டம் மாத்திரம் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் நிகழ்ச்சித் திட்டத்தில் ஈடுபடுத்தப்படும் நிறுவனத்தின் ஊழியர்களின் கல்வித் தகைமைகளைக் கூட்டுவதற்கு முதியோர் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஒருவருக்கு பட்டப்பின் படிப்பினைத் தொடர்வதற்கு 2017 ஆம் ஆண்டில் புலமைப் பரிசிலொன்று வழங்கப்பட்டுள்ளது.

II. இதில் இதுவரையில் சமூக அபிவிருத்தி நிறுவனத்தினூடாக முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்களின் தகைமைகளைப் பரிட்சித்தல் முன்னெடுத்துச் செல்லப்படுவதுடன், அது தொடர்பிலான புரிந்துணர்வு உடன்படிகையினை எதிர்வரும் காலங்களில் கைச்சாத்திடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

III.

(ஈ) **முதியோர் தொடர்பிலான தரவுகளை நாளதுவரைப்படுத்துதல்.**

முதியோர் தொடர்பில் சரியானதும் மற்றும் நாளதுவரைப்படுத்தியதுமான தரவுத் திட்டமொன்றினை முன்னெடுத்துச் செல்லுதல் மற்றும் அது தொடர்பில் வலையமைப்பினுள் உட்புகுத்தும் செயற்பாடுகளை, 2018.07.23 ஆந் திகதி கலந்துரையாடலின் பின்னர் எதிர்வரும் காலங்களில் முன்னெடுத்துச் செல்லுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(உ) **முதியோர் தினக் கொண்டாட்டம்.**

I. இவ்வாறான தவறு மற்றும் தாமதம் எதிர்வரும் காலங்களில் இடம்பெறாமலிருப்பதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.
II. 2018 ஆம் ஆண்டில் மார்ச் மாதத்தில் முன்னெடுத்துள்ள பின்னணிச் செயற்பாடுகளின் பின்னர் இற்றை வரையில் உறுதிப்படுத்தும் பல கடிதங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.
III. எதிர்வரும் காலங்களில் இவ்வாறான தவறு மற்றும் தாமதங்கள் இடம்பெறாமலிருப்பதற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ள

(ஆ) நிலையான வைப்புக்கள் முதிர்வடைந்தன் பின்னர் வட்டி விகிதாசாரங்களை வங்கிகளிலிருந்து பெற்றுக் கொள்ளுதல், அவற்றினைத் தேசிய சபைக்கும் முன்வைத்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் விடயங்களுக்கு நீண்டகாலம் சென்றமையினால் இத்தாமதம் இடம்பெற்றுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(இ) குறைபாடுகளைக் கொண்ட சகல காசோலைகளையும் இதுவரையில் எமக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

03 வருடங்களை அடிப்படையாகக் கொண்ட கூட்டுத் திட்டமொன்று இதுவரை தயாரிக்கப்படவில்லை என்பதுடன், 2019 ஆம் ஆண்டிலிருந்து கூட்டுத் திட்டமொன்றினைத் தயாரித்து முன்னெடுத்துச் செல்லுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகின்றேன்.

செயற்பாட்டுத் திட்டத்தின் முன்னேற்றத்தினை குறிப்பிடுதல் மற்றும் நாளதுவரைப்படுத்துதல் இதுவரை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

(உ) முதியோர் தினத்தினை முன்னிட்டு கொடிகள மற்றும் ஸ்ரிக்கர்களை விற்பனை செய்தல்.

I. கொடிகளைப் பகிர்ந்தளித்தல் தொடர்பில் கணக்காய்வுக்குத் தகவல்களை வழங்கும்போது 14 பிரதேச செயலகங்களின் கொடிகளைப் பெற்றுக்கொள்ளுதல் தொடர்பில் அறிக்கைகள் கிடைக்கப் பெறவில்லை என்பதுடன், உரிய அறிக்கைகளை வரவழைப்பதற்கு கடிதங்கள்

அனுப்பப்பட்டுள்ளன. அதேபோ இதுவரை ரூபா. 1,293,744.58 நிதி கிடைக்கப் பெற்றுள்ளது என்பதை அறிவித்துக் கொள்கின்றேன். மேலும் உரிய பிரதேச செயலகங்களினூடாக காசோலைகள் கிடைக்கப் பெற்று வருவதுடன் அதில் குறைபாடுகளைக் கொண்ட காசோலைகள் மீளவும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

II. கொடிகளை அச்சடித்தல், பகிர்ந்தளித்தல், கொடி விற்பனை மற்றும் கொடி வருமாத்தினைத் திரட்டுதல் தொடர்பில் பல தடைவைகள் தொலைபேசியூடாக விழிப்புணர்வூட்டுதல் மற்றும் நினைவூட்டற் கடிதங்களினூடாகவும் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளது.

III. உரிய ஸ்ரிக்கர் விற்பனையிலிருந்து கிடைக்கப் பெற்ற வருமானம் தொடர்பில் அறிக்கைகளைக் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.இதில் அடிப்படை நோக்கமாகக் கொள்ளப்பட்டிருப்பது, பிரதேச மட்ட அமைப்புக்களின் நிதியினைப் பெருக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதேயாகும். அதே போல ஸ்ரிக்கர் அச் செலவு ரூபா. 159,753/- நட்டம் அல்ல என்பதை அறியத் தருகின்றேன்.

(ஊ) 2018 ஆம் ஆண்டில் முதியோர் சமூகப் பாதுகாப்பு நிதியத்திலிருந்து இந் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அதனை தேசிய சபை அங்கீகாரத்தின் பின்னர் இனிவருங்காலங்களில் முன்னெடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(எ) பொதுத் திறைசேரியினால் 2017 ஆம் ஆண்டு வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகள் வரையறுக்கப்பட்டமையின் கீழ் மேற்குறிப்பிட்ட விடயங்களுக்கென வேறான செலவுத் தலைப்பொன்றின் கீழ் திட்டமொன்றினைத் தயாரிக்கும் இயலுமையொன்று இல்லாமை. எனினும் இவ்வருடத்தில் முதியோர் தினத்தினை ஒட்டி சிறந்த முதியோர் இல்லமொன்றினை தெரிவு செய்யும் போட்டி தயார்படுத்தப்பட்டுள்ளதுடன் அதன் பின்னர் உரிய முதியோர் இல்லங்கள் சிலவற்றினை தரப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன் அத்தரப்படுத்தலின் பின்னர் முதியோர் இல்லங்கள் தொடர்பில் வருடாந்த திட்டமொன்று தயாரிக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

(ஏ)

I. முதியோர்கள் தொடர்பில் சமுதாயத்தின் பொறுப்பு மற்றும் முதுமையின்போது ஏற்படும் ஆரோக்கியப் பிரச்சினைகள் தொடர்பில் பாடசாலை மாணவர்களை விழிப்புணர்வூட்டுதல் இடம்பெற்றுள்ளது.

II. எதிர்வரும் காலங்களில் அது தொடர்பில் நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத்தருகின்றேன்.

III. எதிர்வரும் காலங்களில் அது தொடர்பில் நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத்தருகின்றேன்.

IV. பொதுமக்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திடடங்கள் தற்போது இடம்பெற்று வருகின்றது.

V. எதிர்வரும் காலங்களில் அது தொடர்பில் நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத்தருகின்றேன்.

VI. முதியோர்களுக்கென காப்புறுதிப் பயன்களை வழங்குவதற்கு உரிய காப்புறுதி நிறுவனங்களுடன் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டபோதும் அக்காப்புறுதி நிறுவனங்கள் முதியோர்களுக்கான காப்புறுதித் திட்டமொன்றினைத் தயாரிப்பதற்கு விருப்பினைத் தெரிவிக்கவில்லை.

VII. இவ்வருடத்தில் சமூகப் பாதுகாப்பு நிதியத்தின் கீழ் முதியோர் சங்கங்களுக்கு சுழற்சிக் கடன் நிதியமொன்றினை ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**4.2. முகாமைத்துவச் செயற்பாடுகள்**

(அ) முதியோர்களுக்கான தேசியக் கொள்கையினைத் தயாரிப்பதற்கான செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளதுடன், பொதுமக்கள் கருத்துக்களை அறியும் செயற்பாடுகளுக்கான ஆரம்பச் செயற்பாடுகள் இற்றை வரை இடம்பெற்று வருகின்றது.

(ஆ) இவ் வழக்குத் தொடர்பில் 2018.04.26 ஆந் திகதி கலந்துரையாடலொன்று நடாத்தப்பட்டுள்ளதுடன், அதில் மீளவும் அக்காணியினை எமது நிறுவனத்திற்கு ஒப்படைப்பதாயின் நிதியினைச் செலவு செய்து சிறந்த வகையில் முன்னெடுக்க முடியும் என்பதை அறியத் தருகின்றேன்.

**4.3. செயல் வினைத்திறன்**

முதியோர் கொடுப்பனவு ரூபா. 2000/- இல் மீளவும் ரூபா. 100/- அறவீடு செய்து கட்டியெழுப்பப்படும் சமூகப் பாதுகாப்பு நிதியத்தின் சகல நிதியினையும் 02 அரச வங்கிகளில் முதலீடு செய்வதனூடாக அதிலிருந்து கிடைக்கும் பயன்களை முதியோர்களுக்கு எதிர்வரும் காலங்களில் கிடைக்கும் என்பதை அறியத் தருவதுடன், அந்நிதியினைச் செலவிடுதல் தொடர்பில் செயற்பாட்டுத் திட்டமொன்றினைத் தயாரித்து முதியோர்களுக்கான தேசிய சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அது தொடர்பில் சகல செயற்பாடுகளையும் எதிர்வரும் காலங்களில் முன்னெடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

5. **நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை எட்டச் செய்வதற்கு உரிய செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு நிறுவனத்தினுள் போதிய பௌதிக மற்றும் மனித வளங்கள் இல்லாததுடன், எதிர்வரும் ஆண்டுகளில் அச்செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு போதிய அறிவு மற்றும் வளங்களை வழங்குவற்கு நடவடிக்கை எடுக்கப்படின் சிறந்ததாகும்.

**6. கணக்கீட்டுச் செயற்பாட்டின் வகிபாகம் மற்றும் நல்லாட்சி**

6.1. உள்ளகக் கணக்காய்வு

2017 ஆம் ஆண்டில் நிறுவனத்தினுள் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று இல்லாமையினால் 2018 ஆம் ஆண்டிலிருந்து புதிய உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்

ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதால் 2018 ஆம் ஆண்டில் சகல அறிக்கைகளையும் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கின்றேன்.

**6.2. கொள்முதல்**

இவ்வருடத்தில் செலவு செய்வதற்கான கொள்முதல் திட்டமிடப்பட்டுள்ளதுடன், அதனை, நிர்வாக சபையினை நியமித்ததன் பின்னர் நிர்வாக சபையின் அங்கீகாரத்தின் கீழ் மேல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக அறிவிக்கின்றேன்.

6.3. **பாதீட்டு ஆவணத்தினை முகாமை செய்தல்**

உண்மையான வருமானங்கள் மற்றும் செலவினங்களுக்கான ஒரு கட்டுப்பாட்டு முகவராக வருடாந்தப் பாதீடு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை நான் அவதானித்துள்ளேன்.

6.4. **வருடாந்தப் பாதீட்டு வரைவு**

2018 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளுடன் வரைவு ஆண்டு அறிக்கையொன்றினை முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

**7. திட்டங்கள் மற்றும் கட்டுப்பாடுகள்**

தங்களினால் எடுத்துக் காட்டப்பட்டுள்ளவாறு திட்டம், நிர்வாகத் துறைகள் மற்றும் அதற்கான அவதானிப்புக்களின் பிரகாரம் விசேட கவனத்தினைச் செலுத்தி நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகின்றேன்.

**எம். இராமமூர்த்தி,**
பணிப்பாளர்